இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 210 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 28 – திங்கள்கிழமை 11 மார்ச் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 210 : Thiruvalluvar Year - 2055 - Maasi 28 - Monday 11 March 2024 - Madurai 16 Pages ₹ 5.00






எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களை, நேற்று (10.3.2024), சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் மற்றும் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு ஆகியோரும், ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியாக விருப்ப மனு அளித்தவர்களைச் சந்தித்து நேர்காணல் நடத்தினர்.

# 40 தொகுதிகளிலும் 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' எனக் கருதிப் பணிபுரிக!

## கழக உடன்பிறப்புகள் - கூட்டணிக் கட்சிகளின் தோழர்கள் அனைவர்க்கும்

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 11-**

**"2019 நாடாளுமன்றத் தேர்தல் - 2019 ஊரக உள்ளாட்சித் தேர்தல் இடைத்தேர்தல்கள் - 2021 சட்டமன்றத் தேர்தல் - 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் - தற்போது 2024 நாடாளுமன்றத் தேர்தல் என ஐந்தாவது முறையாகத் தொடர்கிறது வெற்றிக் கூட்டணி!**

**கழக உடன்பிறப்புகள் அனைத்துத் தொகுதிகளிலும், 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' என்பதை மனதில் வைத்துப் பணியாற்ற வேண்டும்! நாற்பதும் நமதே! நாடும் நமதே!" என்று, - கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் அவர்களின் அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசில் மக்களாட்சி மாண்பைக் காக்கும் மகத்தான புதிய அரசை ஆட்சியில் அமர்த்துவதற்காக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவை ஆண்ட பா.ஜ.க. அரசானது, நாட்டையே பல்லாண்டு காலம் பின்னோக்கிக் கொண்டு போய்விட்டது. இதனை இப்போது தடுக்காவிட்டால் இனி எப்போதும் தடுக்க முடியாது என்ற எண்ணத்தில்தான் இந்தியா முழுமைக்குமான ஜனநாயக சக்திகளின் அணிச் சேர்க்கை நடைபெற்றது.

பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது மட்டுமல்ல, அதன் பிறகு அமையப் போகும் அரசானது மக்களாட்சி – சமூகநீதி – சமத்துவம் – சகோதரத்துவம் – மாநில உரிமைகள் – விளிம்புநிலை மக்களின் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டாட்சி அரசாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் 'இந்தியா' கூட்டணி அமைக்கப்பட்டது.

அகில இந்தியக் கட்சிகள், மாநிலங்களை ஆளும் கட்சிகள், மாநிலங்களை ஆண்ட கட்சிகளை உள்ளடக்கிய மாபெரும் அணியைத் தொடங்கினோம்.

**பா.ஜ.க.வின் சர்வாதிகார நடவடிக்கைகள்!**

தங்களை எதிர்ப்பதற்கு யாரும் இல்லை என்ற மமதையுடன் இருந்த பா.ஜ.க தலைமையானது, அதன் பிறகுதான் களத்தின் உண்மை நிலவரத்தை உணர்ந்தது. 'இந்தியா' என்ற சொல்லையே சொல்லாமல் தவிர்த்தது. 'இந்தியா' கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் கட்சிகளைத் தன்னுடைய அதிகார அமைப்புகளின் மூலமாக பா.ஜ.க ஆட்சி



யானது வேட்டையாடியது. இந்தக் கூட்டணியின் வலிமையை நாட்டுக்கு உணர்த்தியதே இதுபோன்ற பா.ஜ.க.வின் சர்வாதிகார நடவடிக்கைகள்தான்.

**'வேண்டாம் மோடி' எனும் முழக்கமே, இந்தியா முழுமைக்கும் இன்று எதிரொலித்துக் கொண்டிருக்கிறது!**

பத்தாண்டு காலத்துக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாமல், ஆட்சி முடியப் போகும் நிலையில் மாநிலம் மாநிலமாகச் சென்று திட்டங்களைத் தொடங்கி வைத்துக் கொண்டு இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள். அவரது அவசரகாலப் பதற்றமானது, அவர் முகத்தில் இருக்கும் பயத்தைக் காட்டுகிறது. 'மீண்டும் மோடி' என்று அவரது ஆதரவாளர்கள் எவ்வளவு கூச்சல் எழுப்பினாலும், 'வேண்டாம் மோடி' என்ற முழக்கமே இந்தியா முழுமைக்கும் இன்று எதிரொலித்துக் கொண்டு இருக்கிறது.

பா.ஜ.க.வை வீழ்த்தியாக வேண்டும் என்ற அரசியல் நோக்கம் 'இந்தியா' கூட்டணிக் கட்சிகளால் மக்கள் மனதில் விதைக்கப்பட்டு விட்டது. பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகள் சிதறிவிடக் கூடாது என்ற நோக்கத்துடன் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பல்வேறு மாநிலங்களில் கூட்டணிப் பேச்சுவார்த்தையையும் தொடங்கி நடத்தி வருகிறார்கள். சில மாநிலங்களில் பேச்சுவார்த்தைகள் முடிவுற்று, தொகுதிப் பங்கீடுகள் செய்யப்பட்டும் விட்டன. சில மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன. சில நாட்களில் அவையும் நல்லபடியாக நடைபெறும் எனத் தெரிகிறது.

**தமிழ்நாடு முழுவதும் - நண்பர் கமல் பரப்புரைப் பயணம்!**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியில் தொகுதிப் பங்கீடு நேற்றைய தினத்துடன் மிகச் சிறப்பாக முடிவுற்றது என்பதை மனமகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். அகில இந்திய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி ஆகிய கட்சிகளுக்குத் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் அருமை நண்பர் கமலஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யமும் நம் அணியில் இணைந்துள்ளது. அவரையும் வரவேற்றுள்ளோம். இந்த அணிக்காகத் தமிழ்நாடு முழுவதும் பரப்புரைப் பயணம் செய்ய இருப்பதாக நண்பர் கமல் அவர்கள் அறிவித்துள்ளார்கள். 2025 மாநிலங்களவையில் அவரது கட்சியின் குரல் ஒலிக்க இருக்கிறது.

**எண்ணிக்கை அல்ல; எண்ணம்தான் முக்கியம்!**

நாங்கள் கொடுத்தோம், அவர்கள் பெற்றார்கள் என்பதாக இல்லாமல், 'அனைவரும் ஒத்த சிந்தனையுடன் அமர்ந்து பேசித் தொகுதிகளைப் பகிர்ந்து கொண்டோம்' என்பதுதான் உண்மையாகும். அனைத்துத் தலைவர்களும், ஊடகங்களில் அளித்த பேட்டிகளில் இதனை வெளிப்படையாகவே சொல்லி இருக்கிறார்கள். எண்ணிக்கை அல்ல, எண்ணம்தான் முக்கியம் என்பதை உணர்ந்தவர்கள் நம் கூட்டணிக் கட்சித் தலைவர்கள். பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை நோக்கம் மட்டுமே கொண்ட தலைவர்கள் இவர்கள். இந்த ஒற்றுமை உணர்வுதான் 2019ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அனைத்து வெற்றிகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### நாடாளுமன்றத் தேர்தல்: கழகத்தின் சார்பில் போட்டியிட

## விருப்பமனு அளித்தவர்களிடம் - கழகத் தலைவர் நேர்காணல்!

### தொகுதி நிலவரம் குறித்து கேட்டறிந்தார்!

*சென்னை, மார்ச் 11 -*

நாடாளுமன்ற தேர்தலில் திமுக சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள், கடந்த மாதம் 19ஆம் தேதி முதல் மார்ச் 7 ஆம் தேதி வரை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள தலைமைக் கழகத்தில் விநியோகம் செய்யப்பட்டது. திமுக சார்பில் போட்டியிட ஏராளமானோர் ஆர்வத்துடன் விருப்ப மனுக்களை வாங்கி சென்றனர்.

இந்நிலையில், மக்களவைத் தேர்தலில் போட்டியிட விரும்பி தலைமை கழகத்தில் விண்ணப்பித்தவர்களிடம் தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேர்காணல் நடத்தினார். தொகுதி நிலவரம், வெற்றி வாய்ப்புகள் குறித்து விருப்ப மனுத்தாக்கல் செய்தவரிடம் முதலமைச்சர் கேட்டறிந்தார். கன்னியாகுமரி, தர்மபுரி, கடலூர், திருப்பூர், ஈரோடு, சேலம், கள்ளக்குறிச்சி, கோவை, பொள்ளாச்சி ஆகிய தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் நேற்று காலை நேர்காணல் நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து மற்ற தொகுதிகளில் விருப்ப மனு அளித்தவர்களிடம் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேர்காணல் நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு ஆகியோர் பங்கேற்றனர்.

---

### வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வலியுறுத்தி

## நாடு முழுவதும் விவசாயிகள் ரயில் மறியல் போராட்டம்!

### தமிழ்நாட்டில் திருவாரூரில் விவசாயிகள் பங்கேற்றனர்!

*புதுடெல்லி, மார்ச் 11-*

வேளாண் விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலை வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தி டெல்லியில் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக நேற்று நாடு முழுவதும் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று ரயில் மறியலில் ஈடுபட்டனர்.

வேளாண் விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதாரவிலை வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் கடந்த ஒரு மாதமாக டெல்லி எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகள் மீது காவல்துறையினர் கொடூர தாக்குதல் நடத்திய நிலையிலும், அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். ஒன்றிய அரசுடன் நடத்திய பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த சூழலில், போராட்டத்தை தீவிரப்படுத்தும் வகையில் நேற்று நாடு தழுவிய ரயில் மறியல் போராட்டத்திற்கு விவசாயிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதனை ஏற்று இந்தியா முழுவதும் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகள் எர்ணாகுளம் ரயிலை மறித்து, ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். இதையடுத்து, ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை காவல்துறையினர் கைது செய்தனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 11-03-2024

# அய்யா வழியை மடை மாற்றாதீர்!

சனாதன ஸ்டிக்கரை அச்சடித்து வைத்திருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி, அதனை எல்லார் முதுகிலும் ஒட்டி வருகிறார். திருவள்ளுவர், வள்ளலார் வரிசையில் இப்போது அய்யா வைகுண்டருக்கும் சனாதன ஸ்டிக்கரை ஒட்டி இருக்கிறார் ஆளுநர்.

சனாதனத்துக்கு எதிராக புதுவழி காட்டியவர்தான் வைகுண்டர். இந்த அரிச்சுவடிகூட ஆளுநர் அறியவில்லை. "அய்யா வைகுண்டர் தோன்றிய காலக்கட்டம், சனாதன தர்மத்துக்கு பாதிப்பு ஏற்பட்ட காலம் ஆகும். சனாதன தர்மத்தைக் காக்கவே வைகுண்டர் தோன்றினார்" என்று பேசி இருக்கிறார் ஆளுநர். அவருக்கு வைகுண்டர் என்றால் யார் என்றே தெரியவில்லை. வைகுண்டம் என்று நினைத்துக் கொண்டு ஏதோ பேசி இருக்கிறார்.

**சாமிதோப்பு தலைமை பதி அடிகளார் பாலபிரஜாபதி, "ஆளுநர் வெளியிட்ட புத்தகம், அய்யா வைகுண்டர் வரலாற்றைத் திரிக்கும் முயற்சி. சனாதனத்தின் வேராக மனுதர்மம் இருக்கிறது. சனாதனத்திற்கு எதிரான செயல்களைத்தான் அய்யா வைகுண்டர் செய்திருக்கிறார். பெண்ணடிமைத்தனம், சாதியத்திற்கு எதிரானவற்றைதான் செய்திருக்கிறார். இவை இரண்டுக்கும் ஆதரவானது சனாதனம். புராணமும் ஆகமங்களும் பொய்யானவை எனக் கூறியிருக்கிறார். வைகுண்டரை அறிந்துகொண்டுதான் பேச வேண்டும். அவர் பேசியது தவறானது" என்று சொல்லி இருக்கிறார்.**

இது தோள் சீலைப் போராட்டத்தின் 200வது ஆண்டு ஆகும். சனாதனச் சாதிப் பாகுபாட்டுக்கு எதிரான மகத்தான போராட்டம் அது. **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'** என்றிருந்த தமிழ்ச் சமூகத்தில் இடைக்காலத்தில் ஏற்பட்ட பண்பாட்டுப் படையெடுப்புகளால் தமிழினத்தின் பண்பாடு சிதைக்கப்பட்டது.

மதத்தின் பேரால் - சாதியின் பேரால் - சாத்திர சம்பிரதாயங்களின் பேரால் - புராணங்களின் பேரால் - மனிதனை மனிதன் பாகுபடுத்தி விட்டார்கள்.

ஆணுக்குப் பெண் அடிமை என்றாக்கி விட்டார்கள். சூத்திரர்களையும் பெண்களையும் இழிவான பிறவிகளாக ஆக்கியது மனு. தீண்டாமையை புனிதம் ஆக்கினார்கள்.

**மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது - கண்ணில் படக்கூடாது என்றளவுக்கு கொடுமைகள் தலைவிரித்தாடியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் குடை எடுத்துச் செல்லக் கூடாது, செருப்பு அணியக் கூடாது, பசு வளர்க்கக் கூடாது, வீட்டுக்கு ஒடு போடக் கூடாது, ஒரு மாடிக்கு மேல் கட்டக் கூடாது, முரட்டுத் துணிதான் அணிய வேண்டும் - என்றெல்லாம் இருந்தது. திருவிதாங்கூர் பகுதியில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்துப் பெண்கள் அனுபவித்த துன்ப துயரம் என்பது மற்ற பகுதிகளில் இல்லாதது.**

குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், மார்பில் சேலை போடக் கூடாது. இதனை மீறி சேலை போட்டுக் கொள்ள முயற்சித்த பெண்கள் தாக்கப்பட்டார்கள். சித்தரவதை செய்யப்பட்டார்கள். இதை விடக் கொடூரமாக 'முலைவரி' என்ற வரியையே போட்டுள்ளார்கள். அப்படி வரிகட்டாத காரணத்தால் தனது மார்பை அறுத்து எறிந்தாள் ஒரு பெண். அதுதான் 'முலைச்சி பறம்பு' வழிபாட்டுத் தலமாக இன்றும் இருக்கிறது. இக்கொடுமைகளுக்கு எதிராக 1822 ஆம் ஆண்டு போராட்டம் தொடங்கியது. 'அய்யா வழி' என்ற புதிய வழியை உருவாக்கிய அய்யா வைகுண்ட சாமிகள் இந்த போராட்டத்தை நடத்தினார்கள். திறந்த மார்போடு பெண்கள் இருக்கக் கூடாது என்பதை தொடர்ந்து பரப்புரை செய்தார் அய்யா வைகுண்டர். பொதுக் கிணறுகள் உருவாக்கினார்.

அன்புக்கொடி என்ற மதப்பிரிவையே உருவாக்கினார். அடித்தள மக்கள் அனைவருக்கும் தலைப்பாகை கட்டி விட்டார். பெண்கள் இடுப்பில் குடம் எடுக்கக் கூடாது என்று அந்தக் காலத்தில் தடை இருந்தது. அதை உடைத்து இடுப்பில் தண்ணீர் குடம் கொண்டு வரக் கட்டளையிட்டவர் அய்யா.

**'தாழக்கிடப்போரை தற்காப்பதே தர்மம்'** என்று சொன்னவர் அவர். இதன்விளைவாகத் தான் 1859 ஆம் ஆண்டு உத்தரம் திருநாள் அரசர் உத்தரவு போட்டார். தோள் சீலை அணியலாம் என்ற உரிமை அதன்பிறகுதான் கிடைத்தது.

18 வகை சாதியினர் உயர் வகுப்பினரால் மிகக் கீழாக நடத்தப்பட்டனர். இதற்கு எதிராகக் குரல் கொடுத்தார் வைகுண்டர். 'அகிலத் திரட்டு அம்மானை' என்பது அவர் எழுதிய புகழ் பெற்ற நூல். பூஜை செய்யக் கூடாது, பூசாரி வைத்துக் கொள்ளக் கூடாது, யாகம் வளர்க்கக் கூடாது, ஹோமம் வளர்க்கக் கூடாது என்றெல்லாம் அறிவுரை வழங்கியவர் அவர். வேறு எதன் மீதும் அச்சம் கொள்ளாதீர்கள் என்று அனைத்து மூடநம்பிக்கைகளையும் நிராகரித்தார் அவர். தன்மானத்தோடு வாழ்ந்தால் கொடுமைகள் உங்களை அண்டாது என்றார் அய்யா.

**யாரும் யாருக்கு முன்னும் அடிமையில்லை என்றும், சாதியைத் தூக்கி கடலில் எறியுங்கள் என்றும், சாதி தானாகவே அழியும் என்றும் சொன்னவர் அய்யா வைகுண்டர். புரோகிதர்களை மிகக் கடுமையாகக் கண்டித்தார். சிலை வழிபாட்டை மறுத்தார். மனிதர் ஒவ்வொருவருக்குள்ளும் தெய்வம் இருப்பதாகச் சொன்னார்.**

**ஒரே நேரத்தில் மன்னரையும், குருமார்களையும் எதிர்த்த புரட்சியாளர் அவர். அத்தகைய அய்யா வைகுண்டருக்குத்தான் சனாதன ஸ்டிக்கர் ஒட்டுகிறார் ஆளுநர்.**

**"நீ பெரிது நான் பெரிது நிச்சயங்கள் பார்ப்போமென்ற வான்பெருதறியாமல் மாள்வார் வீண் வேத முள்ளோர்" என்ற அவருக்குத்தான் சனாதன ஸ்டிக்கர் ஒட்டுகிறார் ஆளுநர்.**

**அய்யா வழி தலைமை பதி பால பிரஜாபதி அடிகளார் சொல்கிறார்: "வைகுண்டர் சனாதனத்தைக் காக்க வரவில்லை. மக்களை சனாதனத்திடம் இருந்து காக்க வந்தார்" என்கிறார். இந்த ஒற்றை வரியில் அனைத்தும் அடங்கி இருக்கிறது.**

## இராயபுரத்தில் பொதுக்கூட்டம்!

சென்னை, மார்ச் 11-

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்கு பகுதி, 48 வது வட்டக் கழகம் சார்பில் மார்ச்1 மக்கள் முதல்வரின் மனித நேய திருநாள், திராவிட மாடல் ஆட்சி சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் 11.03.2024 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சோலையப்பன் தெரு, இம்பால ஹோட்டல் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்ட கழக செயலாளர் இரா.பாலன் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ., ந.மனோகரன், வ.பெ.சுரேஷ், ரா.செந்தில்குமார், நேதாஜி யூ.கணேசன், வி.விஜயலஷ்மி விஜய குமார், கு.ரமேஷ், ரெயின்போ என்.விஜயகுமார், எஸ்.ரமேஷ், இரா.பொன்முடி, எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், எஸ்.யுவராஜ், ந.குமார், என்.வேதா, ஆர்.வி.லட்சுமி வேலு, எம்.ரவி எஸ்.புகழேந்தி கொரியர் பி.முருகன் பாலாலட்சுமணன் ஜெ.கௌரீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.நித்தியானந்தம், ந.மணிமாறன், என்.ஹயாத்பாஷா, எஸ்.தங்க வாசுகி, ரவிச்சந்திரன், பாபா, ஜி.சீனிவாசன், சி.சின்னராஜ் வரவேற்று பேசுகின்றனர்.

இது கழக முன்னணியினர் கலந்து சிறப்புரை யாற்று கின்றனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (9.3.2024) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே நாடாளுமன்ற மக்களவை தேர்தலுக்கான தொகுதி உடன்படிக்கையில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அவர்களும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, துணை பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி,பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், பேச்சுவார்த்தை குழு ஒருங்கிணைப்பாளர் முகுல் வாஸ்னிக், காங்கிரஸ் கட்சியின் தமிழக பொறுப்பாளர் அஜோய்குமார், காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் எஸ். ராஜேஷ் குமார் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் உள்ளனர்.

நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் – தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் கு.செல்வபெருந்தகை அவர்களும் இன்று (9–3–2024) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், காங்கிரஸ் கட்சி, தமிழகத்தில் 9 (ஒன்பது) நாடாளுமன்றத் தொகுதிகளிலும் – புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதியும் என மொத்தம் 10 (பத்து) தொகுதிகளை பங்கிட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| (கு. செல்வபெருந்தகை) | (மு.க.ஸ்டாலின்) 9/3/2024 |
| தலைவர், | தலைவர், |
| தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி | தி.மு.க. |

ஜாபர் சாதிக்: "தி.மு.க. மீது ஆதாரமில்லாமல் குற்றம் சாட்டினால் வழக்குத் தொடர்வோம்!" - மூத்த வழக்கறிஞர் பி.வில்சன்!

# பா.ஜ.க.வின் சூழ்ச்சி அரசியல் தமிழ்நாட்டில் ஒருபோதும் எடுபடாது!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி பேட்டி!

**சென்னை, மார்ச். 11-**

**"ஜாபர் சாதிக்குடன் தொடர்புடையவர்கள் பா.ஜ.க, அ.தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.அதே போல் தலைமைக்கழகச் சட்டத் தலைமை ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. பேட்டியில் "தி.மு.க.வையோ, தி.மு.க. தலைவர்களையோ இணைத்து எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினால் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடர்வோம்" என்று குறிப்பிட்டார்.**

அண்ணா அறிவாலயத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தலைமைக்கழகச் சட்ட தலைமை ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. ஆகியோர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

இது குறித்து சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்த விவரம் வருமாறு:-

தி.மு.க.வைக் களங்கப்படுத்தும் நோக்கோடு பாரதீய ஜனதா கட்சி செய்யும் அரசியல் தமிழ்நாட்டிலும் ஈடேறாது. அகில இந்திய அளவிலும் ஈடேறாது. பா.ஜ.க. அரசின் சர்வாதிகார பிடியிலிருந்து இந்தியாவை மீட்க வேண்டும், நாட்டை விடுவிக்க வேண்டும் என்பதற்காக அகில இந்திய அளவில் அணி திரட்டுவதில் முக்கியப் பங்கு வகித்துக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தல் களத்தில் களங்கப்படுத்தி, அரசியல் ஆதாயம் பெற்றுவிடலாம் என்று பா.ஜ.க. தப்பு கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குத் துணையாக அ.தி.மு.க.வும் துதி பாடிக் கொண்டிருக்கின்றது.

**தி.மு.க.வை களங்கப்படுத்த பா.ஜ.க. முயற்சி!**

முன்பெல்லாம் வருமான வரித் துறை, சி.பி.ஐ. அமலாக்கத்துறை போன்ற ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகளை வரிசையாகக் களமிறக்கி விட்ட பாரதீய ஜனதா அரசு, தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் களங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு NCBஐக் களத்தில் இறக்கிவிட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் போதைப்பொருள் தடுப்பில் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீதிமன்றமும் பாராட்டி இருக்கிறது, எல்லோரும் பாராட்டி இருக்கிறார்கள். ஆனால் தி.மு.க.வை NCBஐ வைத்து மிரட்டிப் பார்க்கலாம் என்று எண்ணிப் பார்க்கிறார்கள். NCB விசாரணை அமைப்பினுடைய துணை இயக்குநர் ஞானேஸ்வர் சிங் டெல்லியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கிறார். ஒரு விசாரணை அமைப்பின் துணை இயக்குநர் புலன் விசாரணை முழுமையாக நடைபெறாமலேயே பத்திரிகையாளர்களைச் சந்தித்திருக்கின்றார். விசாரணை முழுமையாக முடிந்த பிறகு சந்திக்க வேண்டும், ஆனால் அதற்கு முன்னதாகவே





தி.மு.க.வைக் கொச்சைப்படுத்தி விட வேண்டும் என்பதற்காகப் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தியுள்ளார். அதன் மூலமாக ஏதாவது அரசியல் ஆதாயம் அடைய முடியுமா? என்று தப்புக்கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**அ.தி.மு.க. ஆட்சியில் குட்கா வியாபாரம்!**

அ.தி.மு.க ஆட்சியில் குட்கா வியாபாரிகளுக்கு அமைச்சர்களே துணையாக இருந்தது என்பது நாடறிந்த உண்மை. நீதிமன்றத்தில் நாங்கள் போராடி அந்த அமைச்சர் மீதும், தொடர்புடைய அதிகாரிகள் மீதும் சி.பி.ஐ விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கிறோம். இதற்கெல்லாம் ஆட்சியாளர்களே துணையாக இருந்தார்கள். முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் ஒரு பேப்பர் எடுக்கப்பட்டது, அதில் 85 கோடி ரூபாய் எந்தெந்த அமைச்சர்களுக்குத் தரப்பட்டன என்ற விவரங்கள் இருக்கிறது. அதில் வருமானவரித் துறையோ, அமலாக்கத் துறையோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. எந்த வகையிலாவது பா.ஜ.க.வை தாங்கிப் பிடிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசின் புலன் விசாரணை அமைப்புகள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

ஜாபர் சாதிக் மீது பிப்ரவரி 15ஆம் தேதி லுக் அவுட் நோட்டீஸ் அனுப்பி, தேடப்படும் குற்றவாளி என அறிவித்திருக்கிறார்கள். பிப்ரவரி 21ஆம் தேதி மங்கை என்ற திரைப்பட விழாவில் அவர் கலந்து கொண்டு இருக்கின்றார். அப்போது உங்களுடைய NCB எங்கே போனது?

**ஜாபர் சாதிக் வழக்கை நடத்தியது பா.ஜ.க. தான்!**

2013ஆம் ஆண்டிலேயே ஜாபர் சாதிக் மீது ஒரு வழக்கு வந்தது, அன்றைக்கு அ.தி.மு.க.தான் ஆட்சியில் இருந்தது. ஒழுங்காக அந்த வழக்கையும் நடத்தவில்லை. அன்றைக்கு ஜாபர் சாதிக்கிற்காக வழக்கினை நடத்தியவர் பாரதிய ஜனதா கட்சியினுடைய வழக்கறிஞர் பிரிவு தலைவர் பால் கனகராஜ். ஜாபர் சாதிக்கைக் காப்பாற்றியது அ.தி.மு.க. ஆட்சியிலேதான் நடந்தது.

தி.மு.க.வில் இரண்டு கோடி பேருக்கு மேல் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வருகின்றவர்களை எல்லாம் சோதித்துப் பார்த்துக் கட்சியில் சேர்க்க முடியாது, அதே நேரத்தில் அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜாபர் சாதிக் போன்றவர்கள் கட்சியை விட்டே நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

போதைப்பொருள் நடமாட்டத்திற்கு முக்கியக் காரணமாக அமைந்திருப்பது குஜராத்தின் முந்த்ரா துறைமுகம்தான். அந்தத் துறைமுகத்தி லிருந்து 21,000 கிலோவும் கடத்தப்பட்டுள்ளது, 9,000 கிலோவும் கடத்தப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானிலிருந்தும் கடத்தப்பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிராவில்தான் அதிகமான வழக்குகள் போடப்பட்டிருக்கிறது.

தேர்தல் வருகின்றபோது ஏதாவது பொய்யான குற்றச்சாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சுமத்தி விட முடியாதா? என்று பகல்கனவு கண்டு கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. அவர்களுக்கு ஒன்றை ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறோம், தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல. தி.மு.க. என்றுமே சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாது. அதற்குத் துணை போகிறவர்கள் யாரையும் வைத்துக்கொள்ள மாட்டோம் என உறுதிபட கூறுகிறோம். எங்கள் மீது பழி போடுகிறவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறோம், NCBதான் முழுப் பொறுப்பு, NCB தமிழ்நாட்டில் ஏதாவது பிடித்தார்களா? ஜாபர் சாதிக் பற்றி சொல்கிறபோது டெல்லியிலும், வேறு மாநிலத்திலும்தான் போதைப்பொருள் பிடிக்கப்பட்டு இருக்கிறது, தமிழ்நாட்டில் கிடையாது. தமிழ்நாட்டைப் பொருத்த அளவில் போதைப் பொருள் நடமாட்டத்தை முழுமையாகத் தடுத்து வைத்திருக்கிறோம். கஞ்சா பயிர் ஒரு சென்ட் கூட நடப்படாத மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்பது உலகத்திற்கு தெரியும். அப்படிப்பட்ட இடத்தில் இருக்கும் நாங்கள் நிச்சயமாக போதைப் பொருள் நடமாட்டத்திற்கு உறுதுணையாக எந்த வகையிலும் இருக்க மாட்டோம்.

தமிழ்நாட்டை அவமதிக்கும் செயலாக, தமிழ்நாடு போதைப் பொருள் தலைநகரமாக மாறியிருக்கிறது எனக் கூறி தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் அவமதிக்கும் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் போன்ற வளர்ச்சியை எங்களுக்கு ஏன் ஏற்படுத்தவில்லை? என ஒன்றிய பா.ஜ.க.வை நோக்கி வட இந்திய மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். போதைப் பொருள் மாநிலம் போல தமிழ்நாட்டை சித்தரித்தால்தான், தமிழ்நாட்டின் வளர்ச்சி வட இந்தியாவில் பேசுபொருளாகாது என்பதற்காகவே பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். பா.ஜ.க.வில் இருக்கக்கூடிய பலர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களெல்லாம் பாஜகவில் சேர்ந்தவுடன் புனிதர்களாக மாறிவிட்டார்கள்.

**தி.மு. கழகம் மீது வீண் பழி சுமத்துகிறார்கள்!**

முன்னாலேயே நடந்த சம்பவத்தைத் தி.மு.க மீது பழிபோடலாம் என தப்புக் கணக்குப் போட்டார்கள். ஜாபர் சாதிக் கட்சியை விட்டு நீக்கப்பட்டு விட்டார், அவரோடு தொடர்புடையவர்கள் பா.ஜ.க, அ.தி.மு.க.வில்தான் இருக்கிறார்கள். ஜாபர் சாதிக்கை எங்கே பிடித்தார்கள் என NCB தெளிவாகக் கூறவில்லை. விசாரணை நடைபெறாமலேயே செய்தியாளர் சந்திப்பு நடத்தியது தவறு, கண்டிக்கத்தக்கது. குற்றவாளிக்குத் துணைபோக மாட்டோம், சட்டப் பூர்வமாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தருவோம். ஒன்றிய அரசு தகுந்த சாட்சியங்களோடு வழக்கு தொடர்ந்தால் மகிழ்ச்சி. அவர் ஒரு பைசா கூட கட்சிக்குத் தரவில்லை.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

**மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் பேட்டி!**

தலைமைக்கழக சட்ட தலைமை ஆலோசகர் பி.வில்சன் எம்.பி. செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்ததாவது:-

தேவையில்லாமல் இந்த விசாரணையில் தி.மு.க. மற்றும் தி.மு.க. தலைவர்களைச் சிலர் கூறி வருகிறார்கள். விசாரணை ஆரம்ப நிலையில் இருக்கும்போதே NCB துணை இயக்குநர் செய்தியாளர் சந்திப்பு நடத்தியது, அதுவும் தேர்தல் நேரத்தில் சொல்வது சந்தேகத்தைத் தருகிறது. இதுபோன்ற பேட்டிகள் அவதூறு (Defame) செய்யும் எண்ணத்தில் செயல்படுவதாகவே தெரிகிறது. கட்சியையோ, கட்சித் தலைவர்களையோ இணைத்து எந்தவித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் இது போன்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தினால் அவர்கள் மீது நிச்சயமாக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடர்வோம்.

தேவையில்லாமல் அடிப்படை ஆதாரம் இல்லாமல் கட்சியை விட்டு வெளியே அனுப்பியவர் குறித்துப் பேசுகிறார்கள். தகவல் வந்தவுடன் கட்சியில் இருந்து நீக்கி விட்டார்கள். குட்கா வழக்கில் விஜயபாஸ்கர் மீது குற்றம்சாட்டப்பட்டது, அவர் மீது குற்றப்பத்திரிக்கை கொடுத்துள்ளார்கள். அவரைப் பதவியிலிருந்து எடுத்தார்களா? ஆளுநரும் அந்த வழக்கிற்கு அனுமதியே கொடுக்கவில்லை, உச்சநீதிமன்றத்திற்குச் சென்ற பிறகே விஜயபாஸ்கர் மீது மட்டுமல்லாமல் ரமணா வழக்கு மீதும் அனுமதி வழங்கப்பட்டது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கழகத் தலைவர் அவர்களால் அந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. போதைப் பொருளை ஒழிப்பதற்குத் தி.மு.க.வைப் போன்று எந்த கட்சியும் நடவடிக்கை எடுத்தது கிடையாது.

இவ்வாறு பி.வில்சன் குறிப்பிட்டார்.

# ஒன்றுபட்ட இலக்கு! ஒற்றுமைச் சிந்தனை! தொடர் வெற்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

2019 நாடாளுமன்றத் தேர்தல், இடைத்தேர்தல்கள், 2021 சட்டமன்றத் தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள், ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் ஆகிய அனைத்தையும் இக்கூட்டணி மூலமாகத்தான் வென்று காட்டினோம். ஒன்றுபட்ட இலக்கும், ஒற்றுமைச் சிந்தனையும் கொண்டவர்களாக நம் கூட்டணி இயக்கத் தலைவர்களும், முன்னணியினரும், தொண்டர்களும் இருப்பதால்தான் இத்தகைய தொடர் வெற்றியை நாம் பெற்றோம்.

தேர்தலுக்குத் தேர்தல் கூட்டணி மாறும் என்பதை மாற்றி, இலக்கு ஒன்றாக இருந்தால் கூட்டணியும் மாறாது என்பதையும் நாம் நிரூபித்து வருகிறோம். இதனைத்தான் 'இந்தியா' கூட்டணியின் தொடக்கக் கூட்டத்தில் நான் வலியுறுத்திச் சொன்னேன். பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்க்க வேண்டும், அந்தக் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் மற்ற வேறுபாடுகளை மறந்து ஒன்று சேரவும் வேண்டும் என்று வலியுறுத்தினேன். அதுதான் இன்று மாபெரும் கூட்டணியாக மலர்ந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான இக்கூட்டணியின் வெற்றிக்கு கழக உடன்பிறப்புகள் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 40 தொகுதிகளிலும், 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' என்பதை மனதில் வைத்து அனைவரும் பணியாற்ற வேண்டும். அனைத்துத் தொகுதியிலும் நானே போட்டியிடுகிறேன் என்பதை உள்ளத்தில் தாங்கி அனைத்து உடன்பிறப்புகளும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாற்பதுக்கு நாற்பது என்ற அளவில் வென்றால்தான் நாம் நினைக்கும் அரசியல் மாற்றமானது ஒன்றிய அரசில் நடக்கும்.

> **தி**ராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான இக்கூட்டணியின் வெற்றிக்கு கழக உடன்பிறப்புகள் அயராது பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
>
> புதுவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 40 தொகுதிகளிலும், 'வேட்பாளர் மு.க.ஸ்டாலின்' என்பதை மனதில் வைத்து அனைவரும் பணியாற்ற வேண்டும். அனைத்துத் தொகுதியிலும் நானே போட்டியிடுகிறேன் என்பதை உள்ளத்தில் தாங்கி அனைத்து உடன்பிறப்புகளும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களை மதிக்கும் ஒன்றிய அரசை அமைக்க வேண்டுமானால் நாம் இங்கு நாற்பதுக்கு நாற்பது வென்றாக வேண்டும். வெற்றி ஒன்றே உங்களது நோக்கமாக இருக்கட்டும்.

**திராவிட மாடல் ஆட்சி உருவாக்கிக் கொடுத்த ஏற்றம்!**

பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சி இந்தியாவைப் பாழ்படுத்தியதை மக்கள் உணர்ந்துள்ளார்கள். அதனை மேலும் ஆழமாக மனதில் விதையுங்கள். மூன்றாண்டு கால திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டுக்கு உருவாக்கிக் கொடுத்துள்ள ஏற்றத்தை மக்களுக்கு நினைவூட்டுங்கள்.

இந்தியா முழுமைக்குமான கூட்டாட்சி அமைய வேண்டிய அரசியல் தேவையை உணர்த்துங்கள்.

**நாற்பதும் நமதே! நாடும் நமதே!** இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும்

# 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 11 - திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளை வழங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக இத்துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சலவைத் தொழிலை மேற்கொள்ளும் ஏழை எளிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விலையில்லா பித்தளை தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டமும் ஒன்றாகும். தற்போது மாறிவரும் சூழலுக்கேற்பவும், சுற்றுச்சூழல் நலனை கருத்திற்கொண்டும் புதிய முயற்சியாக திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு அரசு முன்னெடுக்கிறது.

அதன்படி, முதற்கட்டமாக, இந்திய எண்ணெய் நிறுவனத்தின் (Indian Oil Corporation Limited), பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கொள்கை (Corporate Social ResponsibilityCSR) நிதியிலிருந்து 29.93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகளை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், IOCL, சென்னை செயல் இயக்குநர் (மார்க்கெட்டிங் பிரிவு), அண்ணாதுரை, முதன்மை பொது மேலாளர் என். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் 5 முக்கிய வாக்குறுதிகள் இடம் பெற உள்ளது!

# தேர்தல் என்றதும் அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு மக்களை ஏமாற்றுகிறார் மோடி!

## ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேட்டி!



**சென்னை, மார்ச் 11 - இளைஞர்கள் மத்தியில் கோர தாண்டவம் ஆடும் வேலையின்மையை ஒழிக்க ராகுல்காந்தியின் அறிவுரைப்படி, காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் 5 வாக்குறுதிகள் இடம்பெற உள்ளது என்றும், அதன்படி ஒன்றிய அரசின் 30 லட்சம் காலி பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் ப.சிதம்பரம் கூறினார்.**

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை தலைமையில், முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம், அகில இந்திய தொழில் வல்லுநர் பிரிவு காங்கிரஸ் தலைவர் பிரவின் சக்கரவர்த்தி ஆகியோர் சென்னை சத்தியமூர்த்திபவனில் நேற்று கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

அப்போது, முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நிருபர்களிடம் கூறியதாவது:

இளைஞர் தினத்தை முன்னிட்டு, ராகுல்காந்தி 5 வாக்குறுதிகளை தந்துள்ளார். இந்த 5 வாக்குறுதிகளும் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் இடம்பெறுகிறது. இன்று வேலையில்லாமை கோர தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது. அரசு வெளியிடும் புள்ளி விபரங்களை எல்லாம் யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. மொத்த வேலையில்லாமை 8 சதவீதம். பட்டம் பெற்றவர்கள் மத்தியில் வேலை யில்லாமை 42 சதவீதம்.

இதை போக்குவதற்கு முதல் வழி, ஒன்றிய அரசில் இருக்கக்கூடிய காலி இடங்களை நிரப்ப வேண்டும். அதன் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் 30 லட்சம் காலி இடங்கள் உள்ளது. இதை பூர்த்தி செய்ய வேண்டும். இவை அனுமதிக்கப்பட்ட காலி இடங்கள். காங்கிரஸ் அரசு அமைந்தால் முதல் கியாரண்டியாக 30லட்சம் காலி இடங்களை பூர்த்தி செய்வோம். 2வது கியாரண்டியாக, அரசு நடத்தக்கூடிய தேர்வுகளில் கேள்வி தாள் கசிவது என்பது வழக்கமாகிவிட்டது.

உத்தரப்பிரதேசத்தில் மட்டும் கடந்த 10 நாட்களில் 2 தேர்வுகளுக்கான கேள்வி தாள்கள் கசிந்துள்ளது. முதலில் போலீஸ் கான்ஸ்டபிள் தேர்வில், 40 லட்சம் பேர் விண்ணபதாரர்கள். 2 நாட்களில் இந்த தேர்வுக்கான கேள்வி தாள் கசிந்து விட்டது என்று அந்த தேர்வை ரத்து செய்து விட்டனர். எத்தனை செலவுகள், எவ்வளவு துன்பம், அவர்களுக்கு ஏற்பட்ட மனசோர்வுகள் தாங்க முடியாதது.

அடுத்தாக, ரெவியூ ஆபிசர் பதவிக்கு 10லட்சம் பேர் விண்ணப்பதாரர். அதையும் ரத்து செய்துவிட்டனர். இதை தடுக்க முடியும். காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்தால் புதிய சட்டத்தை நிறைவேற்றி அதை தடுப்போம். கேள்வி தாள் கசிந்தால் அந்த குற்றவாளிகளை அடையாளம் கண்டு விரைவு நீதிமன்றத்தில் உடனடியாக தண்டனை பெற்று தருவோம்.

3வதாக பயிற்சியாளர்கள் சட்டத்தை கொண்டு வருவோம். ஏற்கனவே இருப்பது உப்பு சப்பு இல்லாத சட்டம். நாங்கள் கொண்டு வரும் சட்டத்தின் படி தனியார், அரசு பொதுத்துறை நிறுவனம் இரண்டுமே கட்டாயமாக பயிற்சியாளர்களை பணிக்கு வைக்க வேண்டும். 10 லட்சம் நிறுவனங்களில் பயிற்சியாளர்களை நியமிக்க முடியும். அப்படி செய்தால் ஏராளமான இளைஞர்களுக்கு பயிற்சி கிடைக்கும், வேலை கிடைக்கும்.

4வதாக ஆங்கிலத்தில் 'கிக் ஓர்க்கர்' என்று சொல்வோம். அதாவது சுவிக்கி போன்ற தொழிலாளர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் கிடையாது. இவர்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வந்து இவர்களின் பணிகளை ஒழுங்குபடுத்துவோம். 5வது கியாரண்டி, பல இளைஞர்களுக்கு தொழில் தொடங்க எண்ணங்கள், சிந்தனை இருக்கிறது. ஆனால் தொழில் தொடங்க முதலீடு அவர்களிடம் இல்லை. உலகத்தில் உள்ள பெரிய நிறுவனங்கள் எல்லாம் முதலில் கார் ஷெட்களில் தான் தொடங்கப்பட்டது.

அதுமாதிரி நிறைய இளைஞர்கள் இந்தியாவில் உள்ளனர். அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு முதலீடு உதவி செய்ய வேண்டும். அதற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் புதிய தொழில் தொடங்க அரசு நிதியில் உள்ளது. அதில் பாதி தொகை ரூ.5000 கோடியை எடுத்து ஒரு நாடாளுமன்ற தொகுதிக்கு ரூ.10 கோடி என்று ஒதுக்கினால் 543 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளது. ஏறத்தாழ ரூ.5,500 கோடி தேவைப்படும்.

அந்த தொகுதிக்கு உட்பட்ட இளைஞர்கள் தொழில் தொடங்க முன்வந்தால் இந்த ரூ.10 கோடியில் இருந்து முதலீடு வழங்கப்படும். அப்படி செய்யும் போது தனி தொகுதியில் தலித் இளைஞர்கள் இருப்பார்கள். பின்தங்கிய தொகுதிகளில் பின்தங்கிய இளைஞர்கள் இருப்பார்கள். பல தொகுதிகளில் சிறுபான்மை, மலைவாழ் மக்கள் இருப்பார்கள். அவர்களுக்கும் முதலீடு கிடைக்கும்.

இப்போது, ஒன்றிய பா.ஜ. ஆட்சியில் மேட்டுகுடி வர்க்கத்துக்கு மட்டுமே முதலீடு கிடைக்கிறது. ஆக இந்த 5 கியாரண்டி களையும் காங்கிரஸ் கட்சி இந்த தேர்தலில் முன்வைக்கிறது. எனவே இளைஞர்களை பார்த்து நாங்கள் கேட்டு கொள்வது. வேலையின்மை தான் உங்களுக்கு இன்று பெரிய பிரச்சினை.

வேலையில்லாமையை ஒழிப்பதற்கு பயிற்சி தருவதற்கு, முதலீடு உதவி செய்வதற்கு இந்த 5 கியாரண்டிகள் அடங்கும். இதை செய்யக் கூடியது காங்கிரஸ் கட்சி. பல புரட்சிகர மான திட்டங்களை போட்டு செய்து காட்டியது காங்கிரஸ் ஆட்சி.

எனவே, இந்த 5 கியாரண்டிகளையும் நிச்சயமாக காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியால் செய்ய முடியும். காங்கிரஸ் ஆட்சியில் ஏராளமான பேருக் கல்வி கடன் கிடைத்தது. ஆனால் இப்போது ஏன் கல்விக் கடன் கிடைப்பதில்லை.

நரிக்குறவர் மகனுக்கு இப்போது கல்விக் கடன் கிடைக்குமா? விதிகளை செம்மையாக திருத்தி எழுதி மாற்றினாலே எல்லோருக்கும் கல்வி கடன் கிடைக்கும். சிலிண்டர் விலை குறைப்பை வரவேற்கிறேன். ஆனால் இது போதாது. நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த குறைத்த ரூ.100ஐ கூட்ட மாட்டேன் என்று பிரதமர் சொல்ல வேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெட்ரோல் ரூ.50 டீசல் ரூ.40 கொடுப்பேன் என்றார், ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவதாக சொன்னார்கள் செய்தார்களா?. ரூ.15லட்சம் வங்கியில் போடுவேன் என்றார். செய்தாரா?

ஜிஎஸ்டி சட்டத்தை கொண்டு வராதீர்கள் என்றோம். நள்ளிரவில் நாடாளுமன்றத்தை கூட்டி இந்த சட்டத்தை கொண்டு வந்தார்கள். இது பிழையான சட்டம், சிறு வணிகர்களில் பெரிய நிறுவனங்கள் வரை வரை கேட்டுப்பாருங்கள் இந்த சட்டத்தை திருத்துங்கள் என்றுதான் சொல்வார்கள். எல்லா மாநிலங்களும் ஜி.எஸ்.டி. சட்டத்தை எதிர்த்து குரல் கொடுக்கிறார்கள்.

மதுரை எய்ம்ஸ், விலைவாசி பற்றி மோடி பேசமாட்டேன் என்கிறார். தேர்தல் வந்த உடன் பல திட்டங்களுக்கு அறிவிப்புகளை மட்டும் வெளியிட்டு மக்களை ஏமாற்றுகிறார். கடந்த பிப்ரவரி 22ம்தேதியில் இருந்து மார்ச் 7ம்தேதி வரை இந்த 14 நாளில் மட்டும் ரூ.5,90,661 கோடி ரூபாய்க்கு பிரதமர் மோடி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதில் தமிழ்நாட்டுக்கு ரூ.17,300 கோடியை அறிவித்துள்ளார்.

இதற்கெல்லாம் பட்ஜெட்டில் நான் ஒரு வரியை கூட நான் பார்க்கவில்லை. இதற்காக பட்ஜெட்டில் பணம் ஒதுக்கியிருக்கிறார்களா? என்றால் எனக்கு தெரிந்த வரை இல்லை. எனவே இதெல்லாம் காகித பூ மாதிரி தான். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் அக்னிபாத் திட்டம் ஒழிக்கப்படும். கடற்படை, ராணுவப்படையில் பழைய முறைப்படியே ஆள் எடுப்பு முறை நடத்தப்படும். முந்தைய அரசு செய்த தவறுக்கு அடுத்த அரசு தான் பரிகாரம் காண முடியும்.

எஸ்பிஐ வங்கி பெரிய வங்கி என்று பீற்றுகிறது. ஒன்றிய பாஜ அரசுக்கு உடந்தையாக ஒரு காரியத்தை செய்வதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். தேர்தல் பத்திரங்கள் என்பது பெரிய விடுகதை அல்ல. மொத்தம் 21,127 பத்திரங்கள் தான் விற்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்தல் பத்திரத்துக்கு என தனி எண் உள்ளது. ஒவ்வொரு பத்திரத்தையும் யார் வாங்கினார்கள் என்பது வங்கிக்கு தெரியும். யார் ரொக்கமாக மாற்றினார்கள் என்பதும் அவர்களுக்கும் தெரியும்.

10 கிளைகளில் தான் விற்றுள்ளனர், மாற்றியுள்ளனர். இதை கண்டுபிடிக்க சுலபமான வழி இருக்கிறது. முதல் காலத்தில் பத்திரத்தின் எண்ணை எழுத வேண்டும். இரண்டாவது காலத்தில் யார் வாங்கினார்கள் என்ற கேஒய்சி நம்பரை எழுதுங்கள். அந்த பத்திரத்தை யார் ரொக்கமாக வங்கினார்கள் என்பதை எழுத வேண்டும்.

வாங்கியதும், மாற்றியதற்கும் 15 நாட்கள் தான் அவகாசம். எனவே இதில் எளிதாக தெரியும். இதை சொல்ல 4 மாசமா? தேர்தலுக்கு முன்னாடி இந்த செய்திகள் வந்து விடக்கூடாது என்பது ஒன்றிய பாஜ அரசு உறுதியாக உள்ளது. ஒரே நாளில் செய்யக்கூடியவை. உச்சநீதிமன்றம் நல்ல தீர்ப்பை தரும் என நம்புகிறேன்.

எஸ்பிஐ வங்கி ஒன்றிய பாஜ அரசுக்கு உடந்தையாக செயல்படுகிறது. ஒன்றிய பாஜ அரசு மாநில அரசுகளை வஞ்சிக்க கூடாது. தமிழ்நாடு அரசின் பட்ஜெட்டை உரையை நேற்று படித்து பார்த்தேன். எந்த அளவுக்கு தமிழகம் வஞ்சிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேன். எல்லா மாநில நிதியமைச்சர்களும் மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள்.

காங்கிரஸ் கொண்டு வரக்கூடிய ஜி.எஸ்.டி. 2.0 திட்டத்தின் படி யாருக்கும் இழப்பீடு ஏற்படாது. இழப்பீடு ஏற்பட்டால் இழப்பீடு தர வேண்டும் என்பது தான் எங்கள் கொள்கை. இ.வி.எம். மிஷினில் நம்பிக்கை இல்லை என மக்கள் நிறைய பேர் சொல்லியிருக்கிறார்கள். மக்களின் அவநம்பிக்கையை தேர்தல் கமிஷன் போக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

எஸ்.வி.சுரேஷ் ஏற்பாட்டில் பூ.சுப்பிரமணியன் வரவேற்பில் விழா!

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை! டி.பி.எம்.மைதீன்கான் - மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*நெல்லை, மார்ச் 11 -* நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக இளைஞர் அணி மாநாடு தீர்மான விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் 1800 பேர்களுக்கு தையல் இயந்திரம், சேலை, வீட்டு உபயோக பாத்திரங்கள், சலவைப் பெட்டி ஆகியவை அடங்கிய பொருட்கள் வழங்கும் நிகழ்வு நெல்லை சந்திப்பு சிந்து பூந்துறையில் வைத்து தச்சநல்லூர் பகுதி செயலாளர் பூ சுப்பிரமணியன் தலைமையில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் மாநகர துணை செயலாளர்கள் செல்வ முருகன் என்ற பிரபு, அப்துல்கையூம், சுதா மூர்த்தி, மாநகரப் பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, மூக்கன், கண்ணையா, தங்கராஜ், ராஜேந்திரன், கிருஷ்ணவேணி, ஆஞ்சிஸ், சுடலைசிவா, சுந்தரவேலன், ஜீவன் மாரியப்பன், கேடிசி முருகன், விஷ்ணு, பாலமுருகன், காதர் ஒலி, பாலன் என்ற ராஜா, ராஜவர்மன், குண்டு பாண்டியன், மலைப்பாண்டியன், ரமேஷ், வள்ளியம்மாள், பேரங்காடி ஐயப்பன், ரமேஷ், சிவனு பாண்டியன், பழக்கடை சங்கர், சுரேஷ், கண்ணன், சுடலைமணி, ஆடிட்டர் முருகன், சீனிவாசன், சுடலைமுத்து, லியாகத் அலி கான், குமார், பாஸ்கர், சரவணன், செல்வம், பால கிருஷ்ணன், வினோத், வரதன், முத்துவேல்மணி கண்டன், பாபு, துர்கா, ராம் வேம்பு விவேக், விசு, நவீனா முத்துக்குமார், செல்வம், மாலா, வள்ளியின் செல்வன், கிட்டுப் பிள்ளை, தர்ம நீலக்குமார், அசன், சதீஷ், தங்கராஜ், குரு நாதன், விசுவநாதன், அந்தோணி, பெயிண்டர் சீனி, பிரபு, நம்பி, ராஜா, கண்ணன், எம்.ராஜா, ஆட்டோ கண்ணன், சீனிவாசன், குமார், ரவி, கர்ணன், குரு, நம்பிராஜன், பாடாலிங்கம், பூதத்தான், கனல் கண்ணன், தளவாய், ராமர், பிச்சுமணி, வசந்த், பாலாஜி, செல்வமணி, வேந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தச்சை பகுதி துணை செயலாளர் 12 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோகுலவாணிசுரேஷ் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை தலைமை கழகப் பேச்சாளர் நெல்லை முத்தையா தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் ஆகியோர் உரையாற்றினர்.

கழக கொள்கை பரப்பு செயலாளர் பாடநூல் பிரிவு வாரிய தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி 1800 பேர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், தலைமை செயற்குழு உறுப்பினர் லெட்சுமணன்,

மாவட்ட அவைத் தலைவர் முருகன், பொருளாளர் வண்ணை சேகர், மாவட்ட துணை செயலாளர், தர்மன், கிரிஜா குமார், மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், ரேவதி பிரபு, ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், மாரியப்பன், அருள் மணி, பகுதி செயலாளர்கள் அன்டன் செல்லதுரை, துபாய் சாகுல், நமச்சிவாயம், அணி அமைப்பாளர்கள் கருப்பசாமி கோட்டையப்பன், நவநீதன், செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர்கள் சங்கர், சுபானி, ரவீந்தர், ராமகிருஷ்ணன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி, அருண்குமார், வட்டக் கழக செயலாளர்கள் பத்மராஜ், சுப்ரீத் சுப்பிரமணியன், அணி துணை அமைப்பாளர் இளைஞர் அணி மீரான் மைதீன், மிக்கேல், இனியன், தலைமை கழகப் பேச்சாளர்கள் பிரிட்டோ அலெக்ஸாண்டர், கவிஞர் மூர்த்தி, பாம்பு கிருஷ்ணன், மைக் மணி, நெல்லை ரவி, திராவிட மணி, இராவணன் உள்பட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேகை செல்வம் நன்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ்.வி.சுரேஷ் செய்திருந்தார்.

## தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

# மாவட்ட துணைச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஏ.சோபியா அவர்கள்மீது தலைமைக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்ட காரணத்தால்;

தூத்துக்குடி தெற்கு மாவட்டம், **மாவட்ட துணைச் செயலாளர் (மகளிர்)** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, **மார்ச் 11 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர/பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 09.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# கொரோனாவில் மோடி செய்ததை மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்! 8

**கொ**ரோனா உலகநாடுகளை எல்லாம் உலுக்கி எடுத்த உயிர்க்கொல்லி நோய். இந்தியாவில் கொரோனா உச்சத்தில் இருந்தபோதுஒன்றிய பாசிச மோடியின் பாஜக அரசு அதன் நிர்வாகத் திறன் இன்மையாலும், அதன் அடிப்படைவாத மத வாத அனுகுமுறையாலும்செய்த கொடுமைகள் ஒன்றா இரண்டா...அவற்றையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான் பாஜக பரிவாரங்கள்வாக்குகளைக் கேட்டு மீண்டும் துணிவுடன் மக்களை சந்திக்க வருகின்றனர்.

**கொடிய கொரோனா நோயின் போது மக்களை நிர்கதியாக்கிய பாஜகவையும், மோடியையும் மக்கள் ஒருபோதும் மறக்கப் போவதில்லை.அக்கொடுமைகளை மக்கள் மறக்கச் செய்வதற்காக பாஜக செய்யும் சதிவேலைகளை முறியடித்து மக்களின் நினைவுகளில் படிந்திருக்கும்கொரோனா கால கொடுமைகளையும் அந்த சூழலிலும் கொஞ்சமும் இரக்கமின்றி நடந்து கொண்ட பாஜக வின் மக்கள் விரோத போக்கையும்அம்பலப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.**



2020 தொடக்கத்தில் இந்தியாவில் கொரோனா தாக்கம் எதிரொலிக்கத் தொடங்கியது. அதற்கு முன்பாகவே சீனா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா பரவுகின்ற செய்தியும் , அண்டை நாடானா இந்தியா கொரோனாவைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்சுகாதாரத்துறை வல்லுநர்கள் வலியுறுத்தத் தொடங்கினர். குறிப்பாக, இந்தியாவின் சர்வதேச விமான நிலையங்களின் மூலமாக அண்டை நாடுகளில் பரவியிருந்த கொரோனா இந்தியாவுக்குள் ஊடுருவும் வாய்ப்பு உள்ளது எனவே, சர்வதேச விமான நிலையங்களைமூடுவது குறித்தோ, அல்லது அங்கு வந்திறங்கும் பயணிகளை கொரோனா சோதனைகளுக்கு உட்படுத்துவது குறித்தோ ஒன்றிய அரசுசிந்தித்து அதற்கான பணிகளைத் தொடங்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

2020 ஜனவரியிலேயே கொரோனா தொற்று இந்தியாவுக்குள் வந்துவிட்டது என்ற செய்திகளைக் குறித்து கொஞ்சமும் கவலையின்றி 2020பிப்ரவரி 24 மற்றும் 25 ஆகிய இரண்டு தினங்கள் அன்றைய அமெரிக்க அதிபரி டொனால்ட் டிரம்ப்பை குஜராத் மாநிலத்திற்கு அழைத்து வந்தார் பிரதமர் மோடி. அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நெருங்கிய நிலையில் குஜராத்தில் “நமஸ்தே ட்ரம்ப்” என்ற பெயரில் 1 லட்சத்திற்கும் அதிகமானோரை திரட்டி அமெரிக்க அதிபருக்கு ஆதரவுக் கரம் நீட்டிக் கொண்டிருந்தார் மோடி.

**மோடி நடத்திய அந்த நிகழ்ச்சியில் ஒரே இடத்தில் கொரோனா பரவல் தொடங்கியிருந்த காலகட்டத்தில் 1 லட்சத்திற்கும் அதிகமானோர் கூடியதால்கொரோனா பரவல் இந்தியாவுக்குள் வேகமெடுத்தது.அரசியல் நோக்கர்கள், எதிர்க்கட்சிகள், சமூக செயல்பாட்டாளர்கள் இது குறித்து கேள்வி எழுப்பத் தொடங்கியதும் வழக்கம் போல்தனது மலினமான விசமத்தனமான மதவாத அரசியலைக் கையில் எடுத்தது பாஜக.**



டெல்லியில் இசுலாமிய அமைப்பான தப்லீக் ஜமாத் 2020 மார்ச் மாதம் அவர்களின் கருத்தரங்கம் ஒன்றை நடத்துகின்றனர்.மார்ச் 1 முதல் 21 வரை அக்கூட்டம் நடைபெறுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அந்த கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்குகொரோனா தொற்று இருப்பதைக் காரணம் காட்டி, இந்தியா முழுவதும் கொரோனா பரவியதற்கு காரணமே இசுலாமியர்கள்தான் என்ற மிகக் கேவலமானமதவாத அரசியலை பாஜக ஆதரவாளர்கள் சமூக வலைத்தளங்களிலும், ஊடக விவாதங்களிலும் பரப்பத் தொடங்கினர்.

டிரம்பை அழைத்து வந்து லட்சக்கணக்கானோரை திரட்டியதோடு மட்டுமின்றிகொரோனா தடுப்பு நடவடிக்கை எதையும் எடுக்காத மோடியின் நிர்வாகத் திறமையின்மையை மதவாத அரசியல் கொண்டு மறைக்க பாஜக இசுலாமிய வெறுப்பை கையில் எடுத்தது.

**மார்ச் 22 ஒரு நாள் முழு அடைப்பிற்கு பிரதமர் அழைப்பு கொடுத்ததன் பேரில், மக்கள் தங்களை வீடுகளுக்குள் முடக்கினர்.கொரோனாவை விரட்ட உலக நாடுகள் எல்லாம் அறிவியல் ரீதியில் ஆக்கப்பூர்வமான ஆய்வுகளை மேற்கொண்ட காலகட்டத்தில்மோடி மின் விளக்குகளை அணைக்கச் சொல்லி தீபங்கள் ஏற்றச் சொன்னார்.**

கொரோனாவிற்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆய்வுகள் குறித்தோ, இந்தியாவுக்குள் கொரோனா ஊடுருவலைத் தடுக்க தான் தவறிவிட்டது குறித்தோமக்கள் சிந்தித்து விடக்கூடாது என்பதில் மோடி தெளிவாக இருந்தார். ஒருபுறம் இசுலாமிய வெறுப்பு விதைக்கப்பட்டது மறுபுறம்விளக்கேற்றச் சொல்லி மக்களின் மத நம்பிக்கைகளைத் தூண்டி அதில் தன் தவறுகளை மறைத்தார்.

**கொரோனாவே போய்விடு என்று எல்லோரும் சேர்ந்து சொன்னால் கொரோனா ஓடிவிடும் என்று ஒன்றிய அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே ஒரு ஆகப்பெரும் அறிவியல் கண்டுபிடிப்பைச் சொன்ன போது உலக நாடுகள் இந்தியர்களின் நிலையை எண்ணி பரிதாபப்பட்டன.2020 மார்ச் 24 முதல் 3 வாரகாலத்திற்கு முழு அடைப்பு என்று அறிவித்தார் பிரதமர் மோடி.இந்த நாட்டின் ஏழை எளிய மக்கள், அவர்களின் வாழ்வாதாரம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் வந்த அந்த அறிவிப்பு கொரோனாவை விட கொடுமையானதாக இருந்தது.ஒரு மிகப்பெரிய பேரிடர் கொரோனா என்பதை புரிந்து கொண்ட மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு தர தயாராகவே இருந்தனர்.**


**தமிழ்க் கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்




அவர்கள் எதிர்பார்த்தது எல்லாம் அரசிடம் இருந்து தங்களின் அன்றாட வாழ்வாதாரத்திற்கான சிறு உதவி. ஆனால், அன்றைக்கு ஒன்றியத்தில் இருந்த மோடி அரசும் அதைச் செய்யவில்லை. தமிழ்நாட்டை அப்போது ஆண்ட அதிமுக அரசும் அதை அப்போது செய்யவில்லை.ஒருபுறம் அன்றாடம் காய்சிகள் தங்கள் தினசரி உணவிற்கே போராடும் நிலைக்கு தள்ளிவிட்ட மோடி மறுபுறம் பெட்ரோல், டீசல், கேஸ் விலைகளைஈவு இரக்கமின்றி உயர்த்தத் தொடங்கினார்.

சொந்த நாட்டு மக்கள் வாழவே வழியின்றி கொத்துக் கொத்தாக மாண்டு மடிந்தனர். டெல்லி உள்ளிட்ட இடங்களில் பிணங்களை எரிக்கஇடமின்றி சாலைகளில் பிணங்கள் கிடத்தப்பட்டிருந்த காட்சிகள் காண்போரை பதறச் செய்தன.வேலை வாய்ப்புக்காக புலம் பெயர்ந்த இந்தியர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு பல நூறு கிலோ மீட்டர்கள் நடந்தே சென்றனர்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் சந்திர சேகர் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஒரு கேள்விஎழுப்புகிறார். கொரோனா பேரிடர் காலத்தில் 2020 ஜனவரி 1 முதல் 2020 டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் ரயில்வே இருப்புப் பாதை வழியாக நடந்து சென்றவர்கள் எத்தனை பேர் பலியாகியுள்ளனர் என்ற



கேள்விக்கு கிடைத்த பதில் தேசத்தையேஅதிர்ச்சிக்குள்ளாக்கியது.

**8733 இந்திய குடிமக்கள் கொரோனா காலகட்டத்தில் மோடி அறிவித்த முழு அடைப்பால் நடந்தே தங்கள் ஊர்களுக்கு செல்லும் போதுரயில்வே பாதை வழியாகச் சென்றவர்கள் சுமார் 8733 பேர் அந்த ஓராண்டில் மட்டும் மரணமடைந்துள்ளனர் என்ற செய்தி ஊடகங்களில் வெளியானது.இவர்களில் பெரும்பாலோனோர் வட இந்தியர்கள். புலம்**



படம் : டெல்லியில் கொரோனாவால் உயிரிழந்த பிணங்களை சாலையோரம் வைத்து எரிக்கப்பட்ட காட்சி

**பெயர் தொழிலாளர்கள்.**

**வேலைக்காக புலம் பெயர்ந்து குஜராத் சென்ற ஒரு பெண் முழு அடைப்பு காலகட்டத்தில் பீகார் திரும்புகிறார்.பீகார் ரயில் நிலையத்தில்அந்த பெண் இறந்து போகிறாள். அவள் இறந்து போனது கூட தெரியாமல் அந்த பெண்ணின் குழந்தை தாயின் சடலத்தில் தாய்ப்பால் தேடிய காட்சி. உலக நாடுகளை எல்லாம் உலுக்கியது.இந்த துயரங்களையெல்லாம் பார்த்து துடி துடித்துப் போன எதிர்க்கட்சிகள் மோடியை நோக்கி, பாஜக அரசை நோக்கி கேள்வி எழுப்பினார்கள்.**

பிள்ளை குட்டிகளோடு,பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு, நடந்தே செல்லும் புலம் பெயர்த் தொழிலாளர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்ற கேளவியை ராகுல் காந்தி எழுப்பிய போது, அவ்வளவு அக்கறை இருந்தால் அவர்களோடு பெட்டி படுக்கைகளைத் தூக்கிக் கொண்டு எதிர்கட்சித் தலைவர்கள்நடக்கட்டும் என்று ஏளனமாக ஆணவமாக ஒரு பதிலைத் தந்தார் இந்த தேசத்தின் நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்.

இவர்தான், வெங்காய விலை ஏறிப் போய் விட்டதே என்ற கேள்விக்கு, அது குறித்து தனக்குத் தெரியாது, தான் வெங்காயம் சாப்பிடும் குடும்பத்தில் இருந்து வரவில்லை என்றவர்.இவர்கள்தான் இந்த தேசத்தை மீண்டும் ஆளத் துடிக்கின்றனர்.

ஏழை மக்களின் எல்லா துயரங்களுக்கு மத்தியிலும் இவர்கள் பெருமுதலாளிகளின் கடனை 24 லட்சம் கோடி தள்ளுபடி செய்துள்ளர்.ஆனால், கொரோனா தடுப்பூசியைக் கூட மக்கள் கட்டணமின்றிப் பெற சட்டப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை இருந்தது என்பதை எப்படி மறக்க முடியும்.. கொரோனா தடுப்பூசி தயாரிக்கும் உரிமையை தனியார் நிறுவனத்திற்கு கொடுத்தது மோடி அரசு. தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது,



தமிழ்நாட்டு மக்களைக் காக்க வெளிநாடுகளில் இருந்து நேரடியாக மாநில அரசுதடுப்பூசிகளை இறக்குமதி செய்துகொள்ள முயற்சி எடுத்தபோது, அதற்கு முட்டுக்கட்டைகளைப் போட்டது மோடி அரசு.

செங்கல்பட்டில் உள்ள தடுப்பூசி மருந்து நிறுவனத்தில் கொரோனாவிற்கு தடுப்பூசி தயாரிக்க நம் தமிழ்நாடு அரசு தயாரானபோதுஅதற்கும் முட்டுக்கட்டை வீழ்ந்தது.இந்தியாவில் கொரோனாவை தடுக்க வழியின்றி மோடி விழி பிதுங்கி நின்றபோது, தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற நம் முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக கொரோனா நிவாரண நிதியை மக்களிடம் நேரடியாகக் கொடுத்தார். முதற்கட்டமாக ரூபாய் 2000 கொடுக்கப்பட்டது. மேலும், தனியார் மருத்துவமனைகளிலும் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தை பயன்படுத்தி கொரோனா சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். தொடர்ந்து கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் அறைக்குள்ளேயே சென்று அவர்களைச் சந்தித்து ஆறுதல் சொன்னபோது,கொரோனா குறித்த மக்களின் பயத்தை போக்கி மாபெரும் மக்கள் தலைவனாக மக்கள் மனங்களில் இடம்பிடித்தார் நம் முதலமைச்சர்.



கவச உடையில் கொரோனா நோயாளிகளை காணச் சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின்

நாம் யார் பக்கம் நிற்கப் போகிறோம். கவச உடையுடன் கொரோனா வார்டுக்குள் சென்று மக்களுடன் நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை ஊட்டிய நம் முதல்வர் ஸ்டாலின் பக்கமா.? அல்லது மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் கவச உடையுடன் கடலுக்கு அடியில் சென்று ஸ்கூபா டைவிங் செய்த மோடியின் பக்கமா ?இந்தத் தேர்தலில் தமிழ்நாடு முடிவெடுத்துவிட்டது.

நலத்திட்டங்களை அள்ளித் தரும், மக்கள் நலனுக்காகசமரசமின்றிப் போராடும் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பக்கம்தான் நிற்கப் போகிறோம் என்று.தமிழ்நாடு மட்டுமின்றி ஒட்டுமொத்த இந்தியாவும் பாசிச பாஜகவை விரட்டி அடிக்க இந்தியா கூட்டணியின்



கரத்தை வலுப்படுத்த முடிவெடுத்துவிட்டது.

இந்திய மக்களின் அந்த முடிவால் ஏற்பட்ட அச்சம்தான் மோடியை கேஸ் சிலிண்டரின் விலையில் 100 ரூபாயை குறைக்கச் செய்துள்ளது.மக்களை 10 ஆண்டுகளாக வாட்டி வதைத்துவிட்டு ஆட்சி முடிவடையும் தருவாயில் 600 ரூபாயை ஏற்றி 100 ரூபாயைக் குறைக்கும் உங்களின் அரசியல் நாடகம் இனியும் வெற்றி பெறாது திரு.நரேந்திர தாமோதர தாஸ் அவர்களே. உங்கள் தோல்வி வெகு தூரத்தில் இல்லை. பாசிச பாஜக தோற்கட்டும்

சமூக நீதி பேணும் இந்தியா வெல்லட்டும்..!

(தொடரும்...)

---

மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமை

## மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 10ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – பி.மூர்த்தி வழங்கினர்!

*மதுரை, மார்ச். 11-*

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் என திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் நாயகர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டும், கழக அரசின் மக்கள் நல நிதிநிலை அறிக்கை எல்லோருக்கும் எடுத்து கூறும் வகையில் திருமங்கலம் தொகுதி தே. கல்லுப்பட்டியில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் பத்தாயிரம் பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மிக சிறப்பாக நடைபெற்றது.

சிறப்புமிக்க இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமை வகித்தார். கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு, மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் சுமார் 10ஆயிரம் ஏழை, எளியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு, மூன்று சக்கர மோட்டார் வாகனம், தூய்மை காவலர்களுக்கு நலத்திட்ட உதவிகள் என எல்லோருக்கும் பல லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி திராவிட மாடல் ஆட்சி நாயகரின் போற்றுதலுக்குரிய பல்வேறு திட்டங்களையும் வரும் நாடாளுமன்ற தேர்தலில் நாற்பதும் நமதே நாடும் நமதே எனும் தலைவரின் எழுச்சி முழக்கத்தை மெய்ப்பிக்கு வகையில் தேர்தல் பணி செயலாற்ற வேண்டும் என்று எழுச்சியுரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் சாயல்குடி இ. ராமர், ஒன்றிய, பேரூர், நகர செயலாளர்கள் கொ. தனபாண்டியன், ராமமூர்த்தி, ஸ்ரீதர், மதன்குமார், தங்கப்பாண்டி, சண்முகம், வருசை முகமது, நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணைத் தலைவர் ஆதவன் அதியமான், பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் நாகராஜன், முத்து கணேசன், பாண்டியன், தனசேகரன் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

இந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் நாகராஜன், வக்கீல் ஆர்.பாலாஜி, லதா அதியமான், சிவனாண்டி, கொம்பாடி தங்கம், ஏர் போர்ட் பாண்டியன், தனசேகரன், செல்லம்பட்டி முத்துராமன், எம். முத்துராமலிங்கம், ஆலங்குளம் சேதுராமன், பாசபிரபு, சிவமுருகன், ஆதிமூலம், செல்வம், செந்தாமரை கண்ணன், இரா.பாண்டி முருகன் உள்ளிட்ட பெரும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பொதுமக்கள் பங்கேற்றார்கள்.

---

சோரஞ்சேரி ஊராட்சியில்

## சிமெண்ட் சாலை, குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி!

### ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர், மார்ச் 11-*

*திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட பூந்தமல்லி ஒன்றியம், சோரஞ்சேரி காலனி, பஜனை கோவில் தெருவில் ரூ. 6 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பூமி பூஜையும், சோரஞ்சேரி கிராமம் ஈஸ்வரன் கோவில் தெருவில் ரூ. 20 லட்சம் மதிப்பில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கான பூமி பூஜையும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பூந்தமல்லி தொகுதி எம்.எல்.ஏ. ஆ.கிருஷ்ண சாமி தலைமை தாங்கி சிமெண்ட் சாலை அமைக்கவும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டவும் பணியினை தொடங்கி வைத்தார். ஏராளமானோர் கலந்து இதில் கழக முன்னணியிர் கொண்டனர்.*

---

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு

தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் திருமதி. ஏ.சோபியா, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டுவந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்டஅனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 09.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



கலைஞர் 100
1924 - 2023
நாடும் நமதே!..
நாற்பதும் நமதே!!...
ZIGZAG Digital
80567 67277
மார்ச் 11
பல்வேறு நலதிட்டங்கள் வழங்கும் விழாவிற்கு
தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்
நலத்திட்ட நாயகரே!..
வருக!..வருக!!...
இடம்:
அரசு கலைக்கல்லூரி,
தருமபுரி
மாண்புமிகு. M.R.K.பன்னீர்செல்வம், B.Sc., BL.,
தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
தடங்கம். பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர்
தருமபுரி மாவட்ட தி.மு.கழகம்




மாண்புமிகு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர்

# நலத்திட்ட நாயகரே!

வருக! வருக!!

என வரவேற்று மகிழும்

## எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், B.S.c., B.L.,

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

முனைவர். **பி.பழனியப்பன்,** M.Sc., Ph.D.,
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்

தடங்கம். **பெ.சுப்ரமணி,** Ex.M.L.A.,
தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

வழக்கறிஞர். **ஆ.மணி,** B.Com.,B.L.,
தருமபுரி மேற்கு மாவட்ட துணை செயலாளர்

## தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.



நாள்: 11.03.2024 இடம்: தருமபுரி
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட
வருகை தரும்...
திராவிட மாடல் நாயகரே!
கழகத்தலைவரே!!
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே!
வருக! வருக!!
உங்கள் மொழி எங்கள் வழி!
மகிழ்ச்சியுடன் வரவேற்கும்.....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.Sc.,BL.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன் M.Sc.,Ph.D.,
மாவட்ட கழக செயலாளர், மேனாள் உயர்கல்வித்துறை அமைச்சர்
தருமபுரி மேற்கு மாவட்ட திமுக.





# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## அவர்களை வணங்கி வரவேற்கிறோம்...

**M.R.K.பன்னீர்செல்வம்** B.Sc., BL.,
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்

தடங்கம் **பெ.சுப்ரமணி** Ex.MLA
தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

முனைவர் **பி.பழனியப்பன்**
மு.அமைச்சர், தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர்

Dr. DNV.S.**செந்தில்குமார்** MDRD
தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

**பி.எஸ்.சீனிவாசன்**
மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்

தருமபுரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள்

பி.என்.பி.இன்பசேகரன், ஆர்.தாமரைச்செல்வன், பி.தர்மச்செல்வன், ஆர்.பி.செந்தில்குமார், எம்.ஜி.சேகர், சி.செல்வராஜ், வே.தங்கமணி, ஆர்.ஆறுமுகம், பி.உமாசங்கர், எம்.ரேணுகாதேவி, நாட்டான் எம்.மாது, கே.எஸ்.ஆர்.சேட்டு, எ.சண்முகம், கே.பி.மல்லமுத்து, பி.வைகுந்தன், என்.செல்வராஜ், அ.கருணாநிதி, ஜி.சபரிநாதன், மடம் க.முருகேசன், வி.சண்முகம், எம்.வீரமணி, வி.நடராஜன், சரஸ்வதி துரைசாமி, சோ.மணி, எம்.வேலுமணி,

தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்

கே.ஆர்.சி.செல்வராஜ், பெ.இராஜகோபால், என்.எஸ்.கலைச்செல்வன், த.கார்த்திக், ஆர்.பி.முத்தமிழன், கோ.அசோக்குமார்

*அன்புடன் வரவேற்கும் :* **எம்.ஜி.எஸ்.வெங்கடேஷ்வரன்** B.E., M.S., (USA)
மாவட்ட அமைப்பாளர், தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி




# எங்கள்முதல்வரே

வருக...வருக...

**M.R.K.பன்னீர்செல்வம்** B.Sc., BL.,
மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்

தடங்கம் **பெ.சுப்ரமணி**
மு.சட்டமன்ற உறுப்பினர் – தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

முனைவர் **பி.பழனியப்பன்**
முன்னாள் அமைச்சர், தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர்

அன்புடன் வரவேற்கும்

**எம்.ஜி.சேகர்** B.A., B.L.,
தலைமை செயற்குழு உறுப்பினர் – முன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர், தருமபுரி கிழக்கு மாவட்டம்


நாள் : 11.03.2024 திங்கள்
இடம் : அரசு கலைக்கல்லூரி, தருமபுரி
கலைஞர் 100 1924 - 2023
பல்வேறு நலதிட்ட உதவிகளை வழங்க வருகை தரும்
விவசாயிகளுக்கு புதிய 1,65,000 "இலவச மின் இணைப்பு திட்டம்" தந்து வாழ்வளித்த
தருமபுரி மக்களுக்கு ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் "திட்டம் I & திட்டம் II," தந்து மக்களின் தாகம் தீர்த்த
ஏழை மக்களுக்கு "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் மூலம் இருப்பிடம் தந்த
"இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" ஒலிக்கட்டும்
மாண்புமிகு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர்
திராவிட நாயகர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கிறோம்...
மாண்புமிகு.
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., B.L.,
வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், தருமபுரி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
தடங்கம் பெ.சுப்ரமணி Ex.M.L.A.,
மாவட்ட கழக செயலாளர், தருமபுரி கிழக்கு மாவட்டம்
P.N.P.இன்பசேகரன் B.E., M.B.A., Ex.M.L.A.,
மாநில விவசாய அணி துணை தலைவர், மு.மாவட்ட கழக செயலாளர்
Dr.DNV.S.செந்தில்குமார் M.D.R.D., M.P.,
வெளிநாடு வாழ் இந்தியர் நல அணி மாநில இணை செயலாளர்
N.செல்வராஜ் B.A.,
ஏரியூர் ஒன்றிய செயலாளர்
மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்
மடம்.K.முருகேசன் B.A.,
பென்னாகரம் தெற்கு ஒன்றிய செயலாளர்
G.சபரிநாதன் B.Sc.,B.Ed.,
பென்னாகரம் (வ) ஒன்றிய செயலாளர்
ஊ. ம. தலைவர், தித்தியோப்பனஅள்ளி
A.கருணாநிதி
பாலக்கோடு கிழக்கு ஒன்றிய செயலாளர்
M.வீரமணி
பென்னாகரம் பேரூர் செயலாளர்
பேரூராட்சி மன்ற தலைவர்
V.சண்முகம்
பேரூர் செயலாளர்
பாப்பாரப்பட்டி
பென்னாகரம் சட்டமன்ற தொகுதி தி.மு.க, தருமபுரி கிழக்கு மாவட்டம்.


கலைஞர் 100 1924 - 2023
நாள் : 11.03.2024
இடம் : அரசு கலைக்கல்லூரி
தருமபுரி.
பல்வேறு நலத்திட்டங்களை
துவக்கி வைக்க தருமபுரிக்கு
வருகை தரும்..
சமூகநீதியின் பாதுகாவலர்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக. வருக..
வரவேற்று மகிழும்...
எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் B.S.c., B.L.,
வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் / மாவட்ட பொறுப்பு அமைச்சர்
பி.என்.பி.இன்பசேகரன் B.E., M.B.A., Ex.M.L.A.,
மு.மாவட்ட கழக பொறுப்பாளர்
தருமபுரி மாவட்ட தி.மு.க


மார்ச் 11 2024 தருமபுரி மாவட்டத்திற்கு
நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும்
இந்திய திருநாட்டை
வழிநடத்தபோகும்
திராவிட
சுடரே!
வருக!
வருக!!
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், B.Sc.,B.L.,
வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
முனைவர். பி.பழனியப்பன், M.Sc.,Ph.D.,
தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. தடங்கம் பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
உயர்திரு. Dr.DNV.S.செந்தில்குமார்
தருமபுரி பாராளுமன்ற உறுப்பினர்
உயர்திரு. கவிஞர் காசிமுத்து மாணிக்கம்
மாநில வர்த்தகர் அணி செயலாளர்
மெடிக்கல்.
அ.சத்தியமூர்த்தி
மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர்,
பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.


மார்ச் 11
தருமபுரி மாவட்டத்திற்கு
அரசு நலதிட்டங்களை வழங்கும்
விழாவிற்கு வருகை தரும்
கழகத் தலைவர்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை
வருக! வருக!! என அன்புடன் வரவேற்று மகிழும்....
மாண்புமிகு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், B.Sc., BL.,
தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்
தடங்கம்.பெ.சுப்ரமணி, Ex.MLA.,
தருமபுரி கிழக்கு மாவட்ட செயலாளர்
என்றென்றும் தங்கள் வழியில் கழக பணியில்
பி.தர்மசெல்வன்
மாநில துணைச் செயலாளர், கழக வர்த்தகர் அணி,
தலைமை செயற்குழு உறுப்பினர்–பென்னாகரம், தருமபுரி



நாள்
11.03.2024
இடம்
தருமபுரி மாவட்டம்.
எல்லா மாவட்டங்களுக்கும்
எல்லா பகுதி மக்களுக்கும்
சமச்சீரான வளர்ச்சியை வழங்கி
எல்லோருக்கும் எல்லாம் தரும்
எங்கள் திராவிட மாடல் முதல்வரே!
ARASU ARTS
தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்
தமிழ் மக்களின்
நாயகரே!
வருக! வருக!!
அர.சக்கரபாணி
உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்
கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர்
ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர்
தே.மதியழகன் எம்.எல்.ஏ
கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர்
கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பில் சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அரசு இசைக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு தரை மற்றும் நான்கு தளங்களுடன் 14 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ்.ஆர்.காந்தி, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் சீ.சௌமியா, பதிவாளர் திருமதி சிவசௌந்தரவல்லி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் தயாரிக்கப்பட்ட

# கலைஞர் தமிழ் குறித்த 100 நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மார்ச் 11 –**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் தயாரிக்கப்பட்ட கலைஞர் தமிழ் குறித்து 100 நூல்களை – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் திருவையாறு தமிழ்ஐயா வெளியீட்டகத்தால் தயாரிக்கப்பட்ட கலைஞர் தமிழ் குறித்து 100 நூல்களை வெளியிட்டார்.

2022 ஜனவரியில் கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கைத் தொடக்கப்பட்டு, பிப்ரவரியில் 100 தமிழ் ஆய்வாளர்கள்/ படைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 2023 அக்டோபர் 1 அன்று மும்பையில் கலைஞர் தமிழ் ஆய்வாளர்கள் பங்கேற்ற 'கலைஞர் தமிழ் ஆய்வு மாநாடு' நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை சார்பில் கலைஞர் -100 நூல் ஆவணங்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டுக் குழுத் தலைவராக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செயல்பட்டு, 'கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை' தலைவராக முனைவர் மு.கலைவேந்தன் அவர்களும், கவிஞர் சண்.அருள்பிரகாசம் அவர்களும் தமிழ் ஆய்வாளர்களுடன் இணைந்து கலைஞர் தமிழ் குறித்த 100 நூல்கள் தயாரிக்கப்பட்டு, திருவையாறு தமிழ் ஐயா வெளியீட்டகத்தால் பிரசுரிக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட கலைஞர் தமிழ் குறித்த 100 நூல்கள் மற்றும் அதன் அந்நூல்களின் ஆசிரியர்கள் விவரங்கள் வருமாறு:

1. கலைஞரின் தமிழ்வழிக் கல்விக் கனவு - மருத்துவர் சு.நரேந்திரன்
2. KALAIGNAR'S WORLD OF LITERATURE - Dr. B. ILANGO
3. கலைஞர் கண்ட அய்யனும் அடிகளும் - மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி
4. கலைஞரும் வள்ளுவரும் - முனைவர் வி.ஜி.சந்தோசம்
5. கலைஞரின் கவிதை மழையில் நனைந்தேன் - முனைவர் சரசுவதி இராமநாதன்
6. கலைஞரின் படைப்புலகில் பெண்ணியம் - முனைவர் உலகநாயகி பழனி
7. கலைஞர் படைப்புலகம் - கவிஞர் சண்.அருள்பிரகாசம்
8. ஐந்தமிழ் அறிஞர் கலைஞர் - முனைவர் சண்முக.செல்வகணபதி
9. வரலாற்றில் கலைஞர் கேள்விகள் ஆயிரம் - முனைவர் மு.கலைவேந்தன்
10. கலைஞரே ஒரு கவிதைதான் - பாவலர் நொச்சிப்பூந்தளிரன்
11. கலைஞரின் மேடைத்தமிழ் - முனைவர் பா.வேலம்மாள்
12. கலைஞர் பிள்ளைத்தமிழ் - புலவர் பூவை. சு.செயராமன்
13. கலைஞரும் வீறுகவியரசரும் - பாரி முடியரசன்
14. கலைஞரின் திருக்குறள் வெளிப்பாட்டுத்திறன் - முனைவர் கலைமகள் சிவஞானம்
15. கலைஞர் செம்மொழி தமிழும் கரந்தைத் தமிழ்ச்சங்கமும் - முனைவர் இரா.இராசாமணி
16. கலையும் கலைஞரும் - முனைவர் அருட்செல்வி கிருபை ராசா
17. கலைஞர் சிறுகதைகளில் புரட்சி - புலவர் ப.கனகரத்தினம்
18. கலைஞரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உவமைகள்- முனைவர் இளமதி சானகிராமன்
19. உடன்பிறப்பே - முனைவர் ம.மணிமேகலை
20. கலைஞரின் சாதனைகள் 100 - முனைவர் கவிதை கணேசன்
21. கலைஞரின் திரைத்தமிழ்தேன் - கவிஞர் ஆவராணி ஆனந்தன்
22. நாட்டுப்புறப்பாடல்களில் கலைஞர் புகழ் பாடல்கள் நூறு - வளப்பக்குடி கவிஞர் வீரசங்கர்
23. கலைஞரின் திருக்குறள் உரை நெறி - முனைவர் கி.சிவகுமார்
24. கலைஞரின் இளமைப்பருவமும் வாழ்வியல் மொழிகளும் - டாக்டர் வா.செ.செல்வம்
25. கலைஞரின் நகைச்சுவை - மருத்துவர் ந.ஜூனியர் சுந்தரேஷ்
26. கலைஞரும் தொல்காப்பியரும் - முனைவர் வெ.அ.நாகரெத்தினம்
27. கலைஞர் ஒரு காலக்கண்ணாடி - முனைவர் பி.கணேஷ்
28. கலைஞரின் தேனலைகள் - முனைவர் பி.ரகமத் பீபி
29. கவிதை வரலாற்றில் கலைஞர் - முனைவர் இரா.தண்டபாணி
30. கலைஞரின் இலக்கியக் கொடை - முனைவர் ச.முருகேசன்
31. கலைஞரின் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள் - முனைவர் க.அழகர்
32. கலைஞரின் புதினங்களில் காரிகையர் - பேரா. கு.ஜெயசித்ரா
33. கலைஞரின் அனல்பறக்கும் வசனங்கள் - சரசுவதி அரிகிருஷ்ணன்
34. கலைஞர் குறளோவியத்தின் எழிலோவியங்கள் - முனைவர் பூ.லலிதபாலா
35. தொல்காப்பியப்பூங்காவில் கலைஞரின் கவின்மணம் - கவிஞர் ச.குமரவேல்
36. கலைஞரின் நெஞ்சுக்குநீதியில் தேதியும் சேதியும் - க.கண்ணகி
37. குறளோவியத்தில் கலைஞரின் ஆளுமையும் பன்முக ஆற்றலும் - வழக்கறிஞர் க.கணேசன்
38. வரலாற்று நோக்கில் கலைஞரின் பொன்னர் சங்கர் - கோ.பிரவினா சேகர்
39. கலைஞரின் திரைப்பயணம் - கவிஞர் தமிழ்க்கனல்
40. கலைஞரின் கவிதைகளில் பகுத்தறிவும் பண்பாடும் - பாவரசு முகவை திருநாதன்
41. கலைஞரின் பன்முக ஆளுமை - முனைவர் சங்கீதா சரவணன்
42. கலைஞரின் பயண அனுபவங்கள் - முனைவர் சு.சுஜாதா
43. கலைஞரின் திரை இசை அமுது - முனைவர் தி.வ.சந்திரிகா
44. கலைஞர் அந்தாதி - பாவரசு வதிலை பிரதாபன்
45. கலைஞர் கவிதைகளில் இலக்கியச் செல்வாக்கு - முனைவர் மு.லோகநாயகி
46. கலைஞரின் சட்டமன்றச் சொற்பொழிவுகள் - முனைவர் சு.பாரதிராணி
47. போற்றதும் போற்றதும் கலைஞரை போற்றதும் - முனைவர் கே.ராதா
48. பேராசிரியரின் பார்வையில் கலைஞர் - முனைவர் தெ.வாசுகி
49. கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா - முனைவர் இரா.கோடீஸ்வரி
50. கலைஞரின் ஆட்சியில் கணினித்தமிழ் - முனைவர் இரா.இந்து
51. கலைஞரின் சிறுகதைகளில் சீர்திருத்தச் சிந்தனைகள் - முனைவர் ச.பொன்ஜெயந்தி
52. கலைஞரின் சிறுகதைகளில் தொன்மம் - முனைவர் வெ.இராணி
53. கலைஞரும் முடியரசரும் - முனைவர் ப.சு.செல்வமீனா
54. கலைஞரின் முரசொலியில் கொள்கை முழக்கங்கள் - முனைவர் வெ.அமுதா
55. கலைஞரின் மொழிப்பற்றும் இனப்பற்றும் - முனைவர் சு.உமாதேவி
56. நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கலைஞரின் நினைவுகள் - முனைவர் சித்ரா ஆசைத்தம்பி
57. கலைஞரின் பொன்மொழிகள் - முனைவர் இரா.நாகேஸ்வரி
58. கலைஞரின் திரைப்படங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் - முனைவர் அ.ஜெயராஜ்
59. கலைஞர் ஒரு புரட்சியாளர் - முனைவர் பொ.திராவிட பிரேமா
60. கலைஞரின் கடிதங்களில் இலக்கிய மேற்கோள்கள் - முனைவர் தி.இராதா
61. கலைஞரின் நாடகங்களில் தமிழும் தமிழ்மக்களும் - ம.ஜெகதீசுவரி
62. கலைஞர் ஒரு பல்கலைக்கழகம் - பேரா. மு.நளா
63. கலங்கரை விளக்கமாய் கலைஞரின் பொன்மொழிகள் - முனைவர் அ.மரியசெசிலி
64. ஆய்வுநோக்கில் கலைஞரின் ரோமாப்புரி பாண்டியன் - முனைவர் ப.செ.முத்துலெட்சுமி
65. இளைஞர்களுக்கு கலைஞரின் ஆத்திசூடி - கவிஞர் க.முகில்வேந்தன்
66. கலைஞரின் காலக்குறிப்புகள் (வினா-விடை) - ந.நல்லய்யன்
67. கலைஞரின் கதைகளில் மனிதநேயம் - முனைவர் ம.ஆனந்தவள்ளி
68. அறிஞர் அண்ணா வழியில் கலைஞர்- பேரா. கோ.இராஜலெட்சுமி
69. கலைஞரின் புதினங்களில் பண்பாட்டுச் சிந்தனைகள் - பேரா. வெ.சுமதி
70. கலைஞரின் வரலாற்று உணர்வுகள் - முனைவர் ஷீலா சீனிவாசன்
71. கலைஞர் நாடகங்களில் தமிழ்ப் பண்பாடு - முனைவர் க.புஷ்பலதா
72. கலைஞரின் குறளோவியம் பன்முகப் பார்வை - முனைவர் நயம்பு.அறிவுடை நம்பி
73. கலைஞரின் சங்கத்தமிழ் மரபும், மாண்பும் - முனைவர் ச.பிரியா
74. கலைஞரின் முத்தமிழ்க் கலைப் பணிகள் - கவிஞர் ப.கதிர்பாரதி
75. கலைஞரின் படைப்பாளுமைத் திறன் - முனைவர் மு.கவிதா
76. கலைஞரின் திருக்குறள் உரைத் திறன் - முனைவர் கோ.கிருட்டிணமூர்த்தி
77. தொல்காப்பியம் சூடிகொடுத்த கலைஞர் - முனைவர் தாமரை
78. கலைஞரின் சிறுகதைகளில் பண்பாடு - முனைவர் மா.பாப்பா
79. கலைஞரின் சிலப்பதிகார நாடகக் காப்பியம் - முனைவர் செ.கற்பகம்
80. கலைஞர் கடிதங்களில் நடையும் கொடையும் - முனைவர் இரா.சிவகுமார்
81. கலைஞரின் நாடகங்களில் இலக்கிய ஆளுமை - முனைவர் சீ.மகேஸ்வரி
82. கலைஞரின் விழுமிய கதை மாந்தர்கள் - முனைவர் த.கண்ணகி
83. கலைஞரின் கடிதங்களில் மொழிவளம் - முனைவர் சே.தெய்வக்கன்னி
84. கலைஞரின் கவிதைக்கலை - முனைவர் சு.சொர்ணரேகா
85. கலைஞரும் இராமானுஜரும்- முனைவர் கே.எஸ். பிரணார்த்திகரன்
86. கலைஞரும் இளங்கோவடிகளும் - முனைவர் யு.ஜெயபாரதி
87. கலைஞரின் வரலாற்று நாவல்கள் - பேரா. மு.புஷ்பா
88. கலைஞரின் வரலாற்று நோக்கில் தென்பாண்டிச் சிங்கம் - முனைவர் பா.சுமத்திரா
89. கலைஞரின் நெஞ்சுக்குநீதியில் காலமும் கருத்தும் - கவிஞர் க.முகில்வேந்தன்
90. நெஞ்சுக்கு நீதியில் கலைஞரின் அனுபவங்கள் - முனைவர் த.உமாராணி
91. கலைஞரின் கடிதங்களில் இலக்கிய ஆளுமை - முனைவர் சுகன்யா சுரேஷ்குமார்
92. A RHETORICAL STUDY OF KALAIGNAR'S SANKATH TAMIZH - Dr. R. ELAVARASU
93. கலைஞர் உலா - வாழ்த்துப்பாமாலை - பாவலரேறு ச.பாலசுந்தரனார்
94. கவிச்சூரியன் கலைஞர் - கவிஞர் சொற்கோ கருணாநிதி
95. கலைஞரின் கவித்துவமும் கலைப் பணிகளும் - முனைவர் த.ஜான்சிராணி
96. கல்வி மேம்பாட்டில் கலைஞர் - முனைவர் கே.ஆர்.கமலா முருகன்
97. கலைஞரும் கவின்மிகு தமிழும் - முனைவர் சு.பாஸ்கர்
98. கலைஞர் ஓர் இதழாசிரியர் - முனைவர் க.பேபி
99. கலைஞர் படைப்புகளில் மனித உரிமைச் சிந்தனைகள் - முனைவர் சி.கண்மணி
100. கலைஞர் பேனா பேசுகிறது - விஜயலெட்சுமி நரேந்திரன்

இந்த 100 நூல்களைப் படைத்தவர்களில் 62 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் வெளியிட்டு நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், திராவிட இயக்க எழுத்தாளர் கவிஞர் சண். அருள்பிரகாசம், திருவையாறு, ஔவைக் கோட்டம் நிறுவனத் தலைவர் முனைவர் மு. கலைவேந்தன், எழுத்தாளர் இமயம் மற்றும் நூலாசிரியர்கள் கலந்து கொண்டனர்.





மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலம் தொகுதி தே.கல்லுப்பட்டி கலைஞர் திடலில் நடைபெற்ற திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினர். உடன் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள், பொதுமக்கள் உள்ளனர்.

### மயிலாடுதுறை மாவட்டம் – சீர்காழி – நத்தம் அருகே சாலை விபத்து!

# உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மார்ச் 11 -**

**மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நத்தம் சாலையின் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் மற்றும் நிதியுதவி அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக முதல்வர் அவர்களின் நேற்றைய அறிவிப்பு வருமாறு:

நாகப்பட்டினம் மாவட்டம், வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலராக பணி புரிந்து வரும் ராஜேஷ் (Gr II PC 699), வயது 35, த/பெ. ரத்தினசாமி என்பவர் நேற்று முன்தினம் (09.03.2024) இரவு தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி காவல் சரகம், சீர்காழி - நத்தம் சாலையின் தடுப்பில் எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும், வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் காவலர் ராஜேஷ் அவர்கள் உயிரிழந்துள்ளது காவல் துறைக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

காவலர் ராஜேஷ் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# நடப்பாண்டில் 3000 புதிய பேருந்துகள்!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேட்டி!



*சிவகங்கை, மார்ச் 11-*

*சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ரூபாய் 2 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மோட்டார் வாகன பகுதி அலுவலகத்தை திறந்து வைத்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது.*

*தமிழகத்தில் காரைக்குடி ராமநாதபுரம் தென்காசி உட்பட பல்வேறு இடங்களில் புதிதாக மோட்டார் வாகன அலுவலகங்கள் முதல்வர் உத்திரவின்பேரில் கட்டப்பட்டுள்ளது. அந்த கட்டிடங்கள் தற்பொழுது திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

*ஜெர்மன் நாட்டிலிருந்து 2200 பேருந்துகள் மொத்தம் 4200 புதிய பேருந்து வாங்க டெண்டர் விடப்பட்டது. அதில் முதல் கட்டமாக 100 பேருந்து சென்னை மாநகரில் முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டது. அது போல் பல்வேறு கோட்டங்களில் புதிதாக பேருந்துகள் இயக்கப்பட்டது.*

*இந்த நிதிநிலை ஆண்டில் 3000 புதிய பேருந்துகள் வாங்க முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.*

*மொத்தம் 7200 புதிய பேருந்துகள் வாங்கப்பட உள்ளது. படிப்படியாக மாநிலம் முழுவதும் புதிய பேருந்துகள் இயக்கப்படும். பழைய பேருந்துகள் விரைவில் மாற்றப்பட உள்ளது.*

*அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக பேருந்துகள் வாங்கப்பட வில்லை. டிரைவர் ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட வில்லை.*

*ஏர்ஹாரன்கள் அதிக அளவில் இருப்பதாக கூறப்படுகிறது. இது குறித்து துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் சீர்குலைந்திருந்த போக்குவரத்துதுறை முதல்வர் உத்தரவின் பேரில் தற்போது சீர் செய்யப்பட்டு வருகின்றது. விரைவில் நிலைமை சீராகும். அப்பொழுது அனைத்து வழித்தடங்களிலும் புதிய பஸ்கள் விடப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் சிவசங்கர் கூறினார்.*

*பேட்டியின்போது கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ச.த.ராதா**

**மார்ச் 11 (2017)**



**இளமை காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**சோளிங்கர் பேரூரில் வட்டச் செயலாளராகவும், பேரூர் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**சோளிங்கர் நகர கூட்டுறவு சங்கி தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் 500 தேய்ப்பு பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத், , சென்னை செயல் இயக்குநர் (மார்க்கெட்டிங் பிரிவு), அண்ணாதுரை, முதன்மை பொது மேலாளர் என். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கலைஞர் கணினி கல்வியகத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள்!

சென்னை, மார்ச் 11 -

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சீரிய முயற்சியால், தொடர்ந்து நான்காம் ஆண்டில் சைதாப்பேட்டையில் படித்த பொருளாதாரத்தில் நலித்த குடும்பங்களைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்ற, ஆண்பெண் என இருபாலருக்கும் கணினிப் பயிற்சி அளித்து அவர்களுக்கு முன்னணி தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும் சிறப்பான பணியை "கலைஞர் கணினி கல்வியகம்" என்ற நிறுவனத்தின் பெயரில் அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி நடத்தி வருகிறார். இக்கல்வியகத்தை கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி 1அன்று சைதாப்பேட்டை பஜார் சாலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியில் அமைய உள்ள கைத்தறி பூங்காஇடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வேலூர் மாநகரச் செயலாளர் ப.கார்த்தி கேயன்எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா, குடியாத்தம் நகராட்சி தலைவர் சவுந்தரராஜன், ஒன்றிய குழுத் தலைவர் என்.இ.சத்தியானந்தம், ஒன்றியச் செயலாளர்கள்,கள்ளூர்ரவி, நத்தம் வீ.பிரதீஷ், நகராட்சி மன்ற உறுப்பினர் நவீன், மகளிர் அணி அமைப்பாளர் மஞ்சுளா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு கடன் அடமான ஆவணங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 11 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட கடனிற்காக அரசிடம் ஒப்புவிக்கப்பட்ட நிலப்பத்திர ஆவணங்களை 9,742 தாயகம் திரும்பியோர்க்கு திரும்ப வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்து, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 3 நபர்களுக்கு அவர்களின் அடமான ஆவணங்களை மீள வழங்கினார்.**

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சியில், இந்தியாவிலிருந்து பர்மா, இலங்கை முதலான பல்வேறு காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் வேலை செய்வதற்கு ஒப்பந்த தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு குடிபெயர்ந்தவர்கள் குடிபெயர்ந்த நாடுகளிலேயே தங்கி விட்டனர். ஆனால் அண்டை நாடான இலங்கையில் இவர்கள் நாடற்றவர்களாக இருந்தமையாலும், பல்வேறு காரணங்களுக்காகவும் இவர்கள் தாயகம் வரவேண்டிய சூழல் ஏற்பட்டது.

1964-ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை இடையே ஏற்பட்ட சிரிமாவோ - சாஸ்திரி உடன்படிக்கையின்படி 5 இலட்சம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கி, இந்தியாவில் மறுவாழ்வு வழங்குவதாக இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. 1966-ஆம் ஆண்டு முதல் 1984ஆம் ஆண்டு வரை இலங்கையிலிருந்து ஏறக்குறைய 5 இலட்சம் பேர் தாயகம் வந்துள்ளனர்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நூற்பாலை மற்றும் சர்க்கரை ஆலைத் திட்டம், வேளாண்மைத் திட்டம், பால்பண்ணைத் திட்டம், பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம், தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு மற்றும் பல்வேறு தொழில் பயிற்சி அளிக்கும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. மேலும், இவர்கள் வணிகத்தில் ஈடுபடுவதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.5,000/- வியாபாரக் கடனும் வழங்கப்பட்டது.

அத்துடன் தாயகம் திரும்பியோர்களுக்கு வீடு கட்டுவதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூ.6,000/- முதல் ரூ.10,000/- வரை வீட்டுக்கடன் அரசால் வழங்கப்பட்டது. இதற்காக ஏறக்குறைய 25 கோடி ரூபாய் கடனாக அளிக்கப்பட்டது. இக்கடனுதவி பெறுவதற்கு இவர்கள் தமது நில ஆவணங்களை அரசிடம் ஒப்புவித்தனர்.

இவர்களது வறிய நிலையின் காரணமாக பெற்ற கடன்களை திரும்ப செலுத்திட இயலாத நிலையில் இவர்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுகடன் மற்றும் வணிகக் கடன்களை 1.04.1974 முதல் 1999 வரை இவர்கள் திருப்பிக் கட்டியது போக மீதித்தொகையை அரசு தள்ளுபடி செய்ய முன் வந்தது. ஆனால் இக்கணக்கை நேர் செய்வதில் 15 வருடங்களுக்கு மேலாக ஒன்றிய அரசின் நிதி மற்றும் உள்துறை அமைச்சகம், தலைமை கணக்கு தணிக்கையாளர் மற்றும் பல்வேறு அலுவலர்களுடன் தமிழ்நாடு அரசு பல்வேறு கடிதத் தொடர்பு மேற்கொண்டிருந்தது. இந்நிலையில் தாயகம் திரும்பிய தமிழர்கள் அரசிடம் ஒப்புவித்திருந்த நிலப்பத்திரங்களை திருப்பித் தருமாறும் வேண்டிக் கொண்டனர்.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது, தாயகம் திரும்பிய தமிழர்களின் நல்வாழ்வு மீது அதிக அக்கறை கொண்டு இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வாக, தாயகம் திரும்பிய தமிழர்களின் ஒப்புவிக்கப்பட்ட நிலப்பத்திரங்கள் முதலான ஆவணங்களை அவற்றில் உள்ள கடன்பதிவுகளை நீக்கம் செய்துவிட்டு சீர்படுத்தி முறையாக உரியவர்களிடம் திரும்ப அளிக்குமாறு ஆணையிட்டார்.

அதன்படி, தாயகம் திரும்பி யோர்களுக்கு அவர்கள் பெற்ற கடனுக்காக அடமானம் பெறப்பட்டிருந்த ஆவணங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இதனால் மாநிலம் முழுவதும் உள்ள 9,742 தாயகம் திரும்பிய குடும்பத்தினர் பயன் பெறுவர்.


மேலும், இதன்மூலம், தாயகம் திரும்பிய தமிழர்கள் அவர்களது பட்டா மாற்றவும், கடன் பெறவும், கடவுச் சீட்டு மூலம் ரெப்கோ வங்கியில் உறுப்பினராகவும் முடியும், ரெப்கோ வங்கியின் சிறப்பு திட்டங்களான கல்வி, மருத்துவம், ஈமச்சடங்கு உதவி, காப்பீட்டு திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் பயன் பெற முடியும்.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் பா. கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி தாளமுத்து (நடராஜன்)

### மார்ச் 11 (1939)



குடந்தையிலிருந்து குமுறும் உணர்ச்சியோடு சென்னை வந்து 13.9.1938 காலை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன்பு கட்டாய இந்தி ஒழிக! ஆரிய இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!"என முழக்கமிட்டு மறியலில் கலந்து கொண்டு கைதானார்.

ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் நீதிபதி "இப்படியே விட்டுவிட்டால் ஊருக்கு போய்விடுகிறீர்களா?" என்று கேட்டு மூச்சு இழுப்பதற்குள் விடை வந்தது தாளமுத்துவின் திருவாயிலிருந்து "இல்லை, முடியாது" என்பதாக. "நாலு மாத கடின காவல் தண்டனை விதிக்கிறேன்" என தீர்ப்பளித்தார் நீதிபதி.

சிறையில் கடுமையான வயிற்று போக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராஜனும்தான் இந்தி எதிர்ப்பு போரின் முதல் களப்பலிகள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## வேலூர் மாவட்டம்

# குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் ஆய்வு!

## அமைச்சர் ஆர்.காந்தி மேற்கொண்டார்!

வேலூர், மார்ச் 11 -

வேலூர் மாவட்டம் குடியாத்தம் கைத்தறிக்கு புகழ் பெற்றது ,இங்கு கைத்தறி ஜவுளி பூங்கா அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக இப்பகுதி நெசவாளர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் குடியாத்தம் பிச்சனூர் பகுதியில் அமைந்துள்ள சிங்கார வேலர் தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் பழுதடைந்த கட்டிடம் புதுப்பித்து கைத்தறி பூங்கா செயல் 3 படுத்தப்பட உள்ளது.

இந்த இடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பின்னர் அமைச்சர் ஆர்.காந்தி பேசியதாவது :

நான் கைத்தறி துறை அமைச்சராக பதவி ஏற்ற முதல் வருடத்தில் நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியில் 10சதவீதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது .

பின்னர் இரண்டாம் ஆண்டில் மீண்டும் 10சதவீதம் உயர்த்தி வழங்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 10 இடங்களில் சிறிய கைத்தறி பூங்காக்கள் அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார் .

அதன்படி ஒவ்வொரு கைத்தறி பூங்காவும் ரூ.3 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. நூற்பாலை களில் எந்திரங்களை நவீனமாக்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வங்கி கடன்களுக்கான வட்டியில் அரசின் சார்பில் 2சதவீதம் வட்டி மானியமாக வழங்கப்பட்டு வந்த நிலையில் வட்டி மானியத்தை 6சதவீதமாக முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். கைத்தறி நெசவாளர்களுக்கு குடும்ப ஓய்வூதிய தொகையை ரூ.1,200 என உயர்த்தி வழங்கி உள்ளார். கைத்தறி நெசவாளர்களுக்கான மின்சாரம் 300 யூனிட் ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது . நெசவாளர்களுக்கு வீடுகட்டி கொடுக்கும் திட்டத்தில் முதலில்ரூ. 2.52 லட்சமாக இருந்தது , இந்த வீடு கட்டும் திட்டத்திற்கான நிதியானது ரூ.4 லட்சமாக உயர்த்தப்பட்டது. ஒரு நாளைக்கு நெசவாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் கூலி வழங்க வேண்டும், என்ற இலக்கை நோக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல் பட்டு வருகிறார். இவ்வாறு அவர் பேசினார். ஆய்வின்போது கைத்தறி துணி நூல் அரசு முதன்மை செயலாளர் தர்மேந்திர பிரதாப்யாதவ், கைத்தறி துறை ஆணையாளர் விவேகானந்தன், கலெக்டர் வே.இரா. சுப்புலட்சுமி, வேலூர்மாநகரதி.மு.க. செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாநகராட்சி மேயர் சுஜாதா, குடியாத்தம் உதவி கலெக்டர் மகாலட்சுமி ஒன்றிய குழு தலைவர் என்.இ. சத்தியானந்தம், நகராட்சி தலைவர் சௌந்தரராஜன், இணை இயக்குனர் கணேசன், உதவி இயக்குனர் செந்தாமரை, தாசில்தார் சித்ராதேவி, தி.மு.க ஒன்றிய செயலாளர்கள் கள்ளூர்ரவி,

நத்தம் பிரதீஷ், அன்பரசன், ஜனார்த்தனன், நகராட்சி மன்ற உறுப்பினர் நவீன் குமார் , மாவட்ட நெசவாளர் அணி துணை தலைவர் கு.மொழிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

கோவை தெற்கு மாவட்டம், வால்பாறை நகர்மன்றத் தலைவர் திருமதி செ.அழகுசுந்தரவள்ளி மற்றும் சி.செல்வம் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 09.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



# ஹிட்லரைப் போல் பிரதமர் மோடி திகழ்கிறார்!

## மானாமதுரையில் அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேச்சு



சிவகங்கை. மார்ச் 11-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகர கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் திராவிட மாடல் நாயகர் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம் நகர கழக துணைச் செயலாளர் எம். எம். ராகு தலைமையில் கா. செல்வம் என்ற அழகர்சாமி, வி. வேல்முருகன், சி.பி. மன்னர் மன்னன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் எம்.எல்.ஏ.மானாமதுரை நகர் மன்ற தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி வரவேற்றுப் பேசினார் . இந்த பொதுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட கழக துணை செயலாளர்கள், த.சேங்கை மாறன் ,கே. எஸ் . எ ம் . ம ணி மு த் து , தலைமை கழக பேச்சாளர் வரகூர் காமராஜ் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானிகணேசன் ஆகியோர் பேசினார்கள். கூட்டத்தில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. இந்தியா தற்போது நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளது.

தமிழகத்தில் நிலவிய நெருக்கடியை கடந்த 2022 ஆம் ஆண்டில் தளபதி அவர்கள்முதல்வராக பதவி ஏற்று காப்பாற்றினார். தற்பொழுது இந்தியாவில் ஜனநாயகம் நசுக்கப்பட்டு வருகிறது.

மூன்றாவது முறை மீண்டும் மோடி பிரதமராக வரக் கூடாது. இண்டியா கூட்டணியை தலைவர் தளபதி அமைத்ததால் பா.ஜ.க.கவிழும் கப்பலாக உள்ளது. தலைவர் தளபதி அவர்கள் அமைத்த இந்தியா கூட்டணியால் பிரதமர் மோடி பயத்தில் உள்ளார்.

தி.மு.க என்பது ஒரு அரசியல் மக்கள் பேரியக்கமாகும். சமுதாய சிந்தனைக் காக சுயமரியாதையை பாதுகாத்திட மொழியை பாதுகாப்பதற் காக உருவான இயக்கம் ஆகும். பின்னர் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நோக்கத்தில் படிப்படியாக தேர்தல்களை சந்தித்து தொடர்ந்தும் தற்போதும் ஆட்சியில் உள்ளது. இதில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோர் காலத்தில் முதல்வராக இருந்தபோது எண்ணற்ற பல சிறப்பான திட்டங்களை நிறைவேற்றியுள்ளார்கள். இந்த திட்டங்கள் இன்று இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளது. பல்வேறு மாநிலங்களில் இத் திட்டங்களை பின்பற்றி செயல்படுத்தி வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா மறைவிற்குப் பின் கழகத் தலைவராக தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றார்கள் .50 காலம் கட்சியை வலிமையுடன் நடத்தி வந்தார்கள். ஐந்து முறை முதல்வராக சிறப்பான முறையில் ஆட்சியை நடத்தினார். பல்வேறு வறுமை ஒழிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தினார். பல்வேறு புரட்சிகரமான பயனுள்ள திட்டங்களை மக்களுக்கு அறிவித்தார். இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு முதலில் இலவச மின்சாரத்தை வழங்கினார். முதல்வராக தலைவர் கலைஞர் பதவி ஏற்றதும் சுமார் 7000 கோடி விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்தார் . அதை பின்பற்றி மத்தியில் பிரதமர் மன்மோகன் சிங் நாடு முழுவதும் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தார். கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா வழியில் கொள்கை லட்சியங்களை சிறிதளவும் விட்டுக் கொடுக்காமல் ஆட்சியையும் கட்சியையும் நடத்தி வந்தார். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் கொள்கை மாறாமல் லட்சியத்துடன் முதல்வர் தளபதி தலைமையில் செயல்பட்டு வருகிறது. வாரிசு அரசியல் என்று முதல்வரை பார்த்து எதிர்க் கட்சியினர் பேசுகிறார்கள் .அவ்வாறு பா.ஜ.க.விற்கோ வேறு யாரும் பேசுவதற்கு தகுதி இல்லாதவர்கள். முதல்வர் தளபதி அவர்கள் தியாகத்தின் உருவில் முதல்வராக பதவி ஏற்றுள்ளார்.

படிப்படியாக 55 ஆண்டுகளுக்கு மேலாக கட்சிக்காக உழைத்து இன்று முதல்வராக வந்துள்ளார். தியாகத்தின் உருவில் முதல்வர் தளபதி அவர்கள் முதல்வராக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். அவர் 55 ஆண்டுகளாக தமிழகம் முழுவதும் சுற்றி வந்துள்ளார். முதல்வர் தளபதியின் கால் படாத கிராமமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு தமிழகத்தை ஓயாது வலம் வந்து தமிழக மக்களுக்காக உழைத்துள்ளார். அதன் பேரில் இன்று பதவிக்கு வந்துள்ளார். திடீரென்று பதவிக்கு வந்தவர் அல்ல. நேற்று கட்சி ஆரம்பித்தவர்கள் இன்று முதல்வர் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் முதல்வர் தளபதி அவர்கள் அவ்வாறு வந்தவர் அல்ல என்பதை அனைவரும் நன்றாக அறிவார்கள்.. 505 தேர்தல் வாக்குறுதிகளில் 85சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளார் . இதில் சொல்லாத வாக்குகளையும் நிறைவேற்றியுள்ளார். ஆனால் பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் எத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. விலைவாசி உயர்வு விண்ணை மூட்டும் அளவிற்கு உள்ளது. பெட்ரோல், டீசல், விலை உயர்வு குறைக்கப்படவில்லை. மக்கள் விரோத அரசாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதேபோல் தமிழகத்தில் கடந்த பத்தாண்டு கால அ.தி.மு.க. அடிமை ஆட்சி நடத்தியது. மக்கள் விரோத ஆட்சியை நடத்தியது. எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்க முடியாது என்று பா.ஜ.க. நினைத்தது. நம்முடைய முதல்வர் தளபதி அவர்களின் சாதுர்யத்தினால் 28 கட்சிகளை இண்டியா கூட்டணியில் ஒரே குடையில் அமைத்துள்ளார். இந்த கூட்டணியை கண்டு பிரதமர் மோடிக்கும், பாஜகவிற்கும் பயம் வந்துள்ளது. இதனால் தான் தி.மு.கவைஅழிப்பேன் என்று நெல்லையில் பிரதமர் மோடி அவர்கள் பேசி உள்ளார்கள். திராவிட இயக்கத்தின் வரலாறு தெரியாத வர் மோடி. இந்திரா காந்தி நெருக்கடி நிலையை கொண்டு வந்த பொழுது அதை எதிர்த்ததால் தலைவர் கலைஞர் ஆட்சி இழக்க நேரிட்டது. அப்போது தி.மு.கவை அழித்து விட வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் அழிக்க முடியவில்லை.மாறாக திமுகவை அழிக்க வேண்டும் நினைத்தவர்கள் காணாமல் போய்விட்டார்கள். எத்தகைய சூழ்நிலையிலும் யாராலும் கழகத்தை அழிக்க முடியாது. தற்போதைய பிரதமரின் பேச்சு சர்வாதிகாரி ஹிட்லரை விட மோசமாக அமைந்துள்ளது. ஹிட்லரின் மறு உருவமாக பிரதமர் மோடி அவர்கள் திகழ்ந்து வருகிறார். தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் அழிக்க வேண்டும் என்று நினைத்தவர்கள் காணாமல் போய் உள்ளார்கள். எனவே சுயமரியாதையுடன் அனைத்து மக்களின் ஆதரவுடன் நடத்தப்படும் தி.மு.க.வை யாராலும் அழிக்க முடியாது. தி.மு.க.வை அழிக்க நினைப்பவர்களுக்கு இது பகல் கனவாக அமையும். மக்களுக்காக ஓய்வறியாது அல்லும் பகலும் அயராது பணியாற்றி வரும் தமிழக முதல்வருக்கு நாம் செய்ய வேண்டிய நன்றி கடன் என்னவென்றால் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் நமது வாக்குகளை இண்டியா கூட்டணிக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டியது தான். இதன் மூலம் இந்தியா காப்பாற்றப்படும். இந்தியாவில் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். மதசார்பற்ற ஆட்சி மலரும். மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வரும் என்று கூறும் கருத்துக்கணிப்பு தவறானதாகும். வட மாநிலங்களில் பா.ஜ.க.வின் செல்வாக்கு குறைந்து வருகிறது. எனவே அனைவரும் முதல்வர் தளபதி அவர்கள் வேண்டுகோளை ஏற்று இண்டியா கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன். ஒன்றிய கழக செயலாளர்கள் துரை. ராஜாமணி, எம்.அண்ணாதுரை, ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை, துணைத்தலைவர் முத்துசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஏஆர்.ஜெயமூர்த்தி, கு.ராசாங்கம், நகர செயலாளர் க.பொன்னுச்சாமி, நகர்மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம் சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், நகர நிர்வாகிகள் சு.ரவிச்சந்திரன், சண்முகம், மகளிர் அணி சண்முகப்பிரியா, மயில்வாகனன், தகவல் தொழில் நுட்ப அணி இந்துமதி திருமுருகன், சதீஷ்குமார் கண்ணன் மாணவரணி கார்த்திக், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பா .அதியமான் இளைஞரணி மாரிக்கண்ணன், மூர்த்தி, பாஸ்கரன், நகர் மன்ற உறுப்பினர்கள் ராஜேஷ்குமார், மணிக்கண்ணன், மாரீஸ்வரன், அருண்குமார், ஜோதிஷ்குமார், கார்த்தி, ரகுபதி, மாணவரணி மா. செம்புகுட்டி .பால முருகன், பாலாஜி, அஞ்சலி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துகுமார் ,ஊராட்சி மன்றத் தலைவர் சண்முகநாதன், மற்றும் சார்புஅணி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். செந்தில்குமார் பெரிய கருப்பன் நன்றி கூறினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நகர் தி.மு.க. செயலாளர் க.பொன்னுச் சாமி தலைமையில் நகர்கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,சின்னமலைக்குன்று ஊராட்சி,ஜமீன்உசிலம்பட்டியில் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ. 43லட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கான பணியினை கழகத் துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் திருமதி பெ.கீதாஜீவன் முன்னிலையில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் தலைமையில் அடிக்கல் நாட்டினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமிபதி தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஜேன் கிறிஸ்டிபாய் எட்டையபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி, கோவில்பட்டி ஒன்றிய குழு தலைவர் கஸ்தூரி சுப்புராஜ், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன் கோவில்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் முருகேசன் விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




மொழி பெயர்க்கப்பட்ட பாடநூல்கள் வெளியிட்டபோது...





# அழகுத் தமிழில் உயர் கல்வி... உலக அறிவு!

## திராவிட மாடல் அரசு

59

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

‘குழந்தைகள் தங்கள் தொடக்கக் கல்வியைத் தங்களது தாய்மொழியில் படிக்க வேண்டும். அப்படிப் படித்தால்தான் வலுவான அடித்தளம் கிடைக்கும்’ என்பது உலகம் முழுவதிலும் உள்ள கல்வியாளர்களின் கருத்து. இது அறிவியல்பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்ட ஒன்று.

அடிப்படைக் கல்வியை மட்டுமல்ல, உயர் கல்வியைக் கூட தங்களது தாய்மொழியில் படிக்க வேண்டும் என்று சொல்லி, பல நாடுகள் தங்களது தாய்மொழியிலேயே மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்படிப்புகள் உள்ளிட்ட பல படிப்புகளை வழங்கி வருகின்றன.

இந்தியாவைப் பொறுத்த அளவில், ‘தாய்மொழியில் உயர் கல்வி’ என்ற கருத்தை முதன்முதலில் சிந்தித்த மாநிலம் தமிழ்நாடு. பிறகு அது ‘தமிழில் கல்லூரிக் கல்வி’ என்ற பொருளில் கலைத்துறைப் படிப்புகள் மட்டும் தமிழில் வழங்கப்பட்டு வந்தன. 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், கலைத்துறைப் படிப்புகள் மட்டுமல்லாது, அறிவியல் படிப்புகளும் தமிழில் வழங்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோதெல்லாம், உயர் கல்வியில் தமிழுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில்தான் பொறியியல் கல்வி தமிழில் வழங்கப்பட்டது. அதன் நீட்சியாகவே தற்போது மருத்துவப் படிப்புக்கான நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், பொறியியல் மட்டுமல்லாது, இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், வரலாறு போன்ற துறை சார்ந்த படிப்புகளுக்கான பாடநூல்களை, தமிழில் வழங்க, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ விதைத்திருக்கும் வித்தே **‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’**.

### பாடநூல் கழகமும் மொழிபெயர்ப்பும்

1970களில் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் ‘தமிழ்நாடு பாடநூல் கழகம்’ தொடங்கப்பட்டது. அந்தக் காலத்தில் எல்லாம் பள்ளிப் புத்தகங்களை தனியார் பள்ளிகள்தான் வெளியிட்டு வந்தன. அவை சாமானிய மக்களால் வாங்க முடியாமல் போனது. அவ்வாறு பள்ளிப் புத்தகங்களைக் காசு கொடுத்து வாங்க இயலாத காரணத்தால், பள்ளியில் இருந்து இடை நின்றவர்கள் ஏராளம். பள்ளிக் கல்வியைத் தொடர்வதற்கு, பாடப் புத்தகங்களின் விலை ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணித்தான் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாடநூல் கழகம், பள்ளிப் புத்தகங்களை அச்சடித்து குறைந்த விலையில் மாணவர்களுக்கு வழங்கி, மாணவர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றியது.

பிறகு, கல்லூரிப் படிப்புகளை தமிழில் வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அவற்றிற்கான பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டன. 1967 -ஆம் ஆண்டு முதல் 1976 -ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மட்டும் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் சார்ந்து, 875 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அந்த நுல்களில் பல கடந்த சில ஆண்டுகளாக ஆவணபதிப்புகளாக வெளியிடப்பட்டு வருகின்றன.

#### மூலப் பொருள், பயிற்சிப் பொருள்!

தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் பியர்சன் கூட்டு வெளியீடாக 11 மற்றும் 12- ஆம் வகுப்பு மாணவர்களுக்காக மொழி பெயர்க்கப்பட்டுள்ள பாடநூல்கள் ‘நீட்’, ‘எய்ம்ஸ்’, ‘ஜிப்மர்’ உள்ளிட்ட உயர்கல்வி மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான பயிற்சிப் பொருளாகவும் விளங்குகின்றன. இந்நூல்களில் அடங்கியுள்ள பாடங்கள், மிகவும் கவனமாக, தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு நுழைவுத் தேர்வுகளை மாணவர்கள் சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. மேலும், இந்நூல்களை ‘என்.சி.இ.ஆர்.டி’ (NCERT) அடிப்படையில் அமைந்துள்ள 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளுக்கும் மூலப்பொருளாகப் பயன்படுத்தலாம்.

அதன் பிறகு, சுமார் 40 ஆண்டுகள் கவனம் பெறாமல் இருந்த இந்த மொழிபெயர்ப்பு முயற்சிக்கு, 2021-இல் ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பிறகு ‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’ மூலம்தான் மீண்டும் உயிர் கிடைத்தது.

### முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்

நமது ‘திராவிட மாடல் அரசு’ அமைந்த பிறகு, தமிழ்நாடு பாடநூல் கழகம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்களின் சிந்தனைகளை, தமிழ்நாட்டின் சமகால இலக்கியப் படைப்புகளை ஆங்கிலம் உள்ளிட்ட 22 உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் எடுத்துச் செல்ல ‘திசை தோறும் திராவிடம்’ எனும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அந்தப் புத்தகங்கள் எல்லாம் பொது வாசகர்களுக்கு உரியவை.

அவை இல்லாமல், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்காகவே துறைசார் பாடநூல்களை தமிழில் கொண்டு வரும் முயற்சிதான், ‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம்’. இந்தத் திட்டத்தின் கீழ், மருத்துவம், வேளாண்மை, வானியல், தொழில்நுட்பம், சட்டம், பொருளாதாரம், கணிதம், கால்நடை மருத்துவம், புவியியல், புள்ளியியல் ஆகிய துறைகளுக்கான பாடநூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தில் இதுவரை, சுமார் 90 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் வெளியாகி உள்ளன.

இந்தத் திட்டத்தில் உள்ள சிறப்பு என்னவென்றால், ஒவ்வொரு துறையின் பாடநூல் மொழிபெயர்ப்புகளுக்கு துறைசார் அறிஞர்களைக் கொண்ட தனித்தனிக் குழுக்கள் உள்ளன. அதில் அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள், அரசுப் பள்ளி ஆசிரியர்களும் இடம்பெற்றுள்ளனர். எனவே, மொழிபெயர்ப்பு முதல் பிழைதிருத்துதல் வரையிலான எல்லா பணிகளிலும் அவர்களின் பங்களிப்பு இருப்பதால் கருத்துப் பிறழ்வு, பொருள் மயக்கம் போன்ற எந்தத் தவறும் நிகழ்ந்து விடாதபடி, செம்மையான மொழிபெயர்ப்புகள் வருகின்றன.

### வளம் சேர்க்கும் கலைச்சொல்லாக்கம்

உயர் கல்விக்கான பாடநூல்களை தமிழில் வழங்குவதில் உள்ள மிகப்பெரிய சிக்கலே, துறைசார் சொற்களுக்கான பொருளை தமிழில் எளிமையாகவும் புதுமையாகவும் வழங்க வேண்டும் என்பதுதான். ஆங்கிலத்தில் ‘கிளாஸரி’ என்று சொல்லப்படும் அவற்றை தமிழில் ‘கலைச்சொல்லாக்கம்’ என்று வழங்கும் முயற்சிகள் பல காலமாக நடைபெற்று வருகின்றன. எனினும், ‘முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்ட’த்தின் கீழ், இந்த கலைச்சொல்லாக்க முயற்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

துறைசார் பாடநூல்களை மொழிபெயர்க்கும் போது, அவற்றுக்கான கலைச்சொல்லாக்கங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் இடம்பெற கவனம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. தவிர, தமிழில் கலைச்சொல்லாக்க வரலாறு குறித்தும் புத்தகங்கள் கொண்டு வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழுக்கு வளம் சேர்க்கும் இன்னொரு முயற்சி இது.

### கூட்டு வெளியீடுகள்

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் மொழிபெயர்க்கப்படும் பாடநூல்கள் எல்லாம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் வெளியிடுகிறது. கூடுதலாக, பாடநூல் கழகம், ‘பியர்சன்’ போன்ற இதர பதிப்பகங்களுடன் இணைந்தும் துறைசார் பாடநூல்களைக் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டு வருகிறது.

பியர்சன் என்பது 70 உலக நாடுகளில் பரந்து விரிந்திருக்கும் ஓர் உலகளாவிய கற்றல் நிறுவனமாகும். நுணுக்கப்பார்வையும் உலகத்தரமான நிபுணத்துவமும் நெடிய வரலாறும் கொண்ட இந்தப் பதிப்பகம், அறிவியல் துறை பாடநூல்களை வெளியிடுவதில் சர்வதேச அளவில் புகழ்பெற்றது. அந்தப் பதிப்பகத்துடன் இணைந்து 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடநூல்கள் தமிழில் கொண்டு வரப்பட்டுள்ளன.

‘திராவிட மாடல் அரசு’ மேற்கொள்ளும் இந்த மொழிபெயர்ப்பு முயற்சிகள், உலகை நம் வசமாக்கும் இன்னொரு கிரியா ஊக்கி...!

**...சாதனை தொடரும்**

#### வீட்டுக்கு வரும் நூலகம்!



அறிவியக்கத் தளத்தில் தமிழ்நாட்டின் தவிர்க்க முடியாத மையமாக உயர்ந்து நிற்கிறது, அண்ணா நூற்றாண்டு நூலகம். எட்டு தளங்கள் கொண்ட இந்த பிரமாண்ட நூலகத்தில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் வாசகர்களின் அறிவுத் தேடலை நிறைவு செய்கின்றன. போட்டித் தேர்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் அங்கேயே படித்து, குறிப்புகள் எடுக்கும் வசதிகளுடன் தற்போது, நூல்களை வாசகர்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வசதிகளை அளிக்க உள்ளது, அண்ணா நூற்றாண்டு நூலகம்.

வாசகர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, இந்த வசதியை அளிக்க உள்ளது. முதற்கட்டமாக சிறார் பிரிவு மற்றும் தமிழ்ப் பிரிவு நூல்களை, வாசகர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிக்கலாம். 30 நாட்களில் திருப்பி அளிக்க வேண்டும் என்கிற வழிகாட்டுதல்படி, வாசகர்கள் நூல்களை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம். இரண்டு முறை புதுப்பித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படும். ‘புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகையே புத்தகமாகப் படிப்போம்’ என்ற முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நூலகம், வீட்டுக்கே உலகைக் கொண்டு வருகிறது.

#### ஃப்ளாஷ்பேக்



வெங்கடராமன்



**பிறந்த நாள் சந்திப்பு!**

என் தந்தை நெல்லிக்குப்பம் வி.கிருஷ்ணமூர்த்தி, 1980-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வென்று மூன்றாவது முறையாக, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு, என்னுடைய தந்தையுடன் கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். இளம் வயதில் அவரை சந்தித்தது, இன்றைக்கும் மனதை விட்டு அகலாமல் அப்படியே இருக்கிறது.

**–வி.கி.வெங்கடராமன்,**
**அண்ணா கிராமம் ஒன்றியக் கழகச் செயலாளர்,**
**கடலூர் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

#### கருவூலம்


**டெல்லியில் ஒலித்த கலைஞரின் குரல்!**

1969-இல் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டின் முதல்வராகக் கலந்துகொண்ட கலைஞர், “மத்திய- மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது. முதற்கட்டமாக இங்கு அது குறித்து ஆராய வேண்டும்” என்றார். அந்தக் கூட்டத்தில் மத்திய - மாநில உறவுகள் குறித்து, ஆராய வேண்டுமென யோசனை சொன்ன ஒரே முதல்வர் கலைஞர்தான் என, யு.என்.ஐ. ஊடகம் செய்தி வெளியிட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

414

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.